# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்


மலர் : 6 இதழ்: 7 ஏப்ரல் : 2022 ரூ.20/-

Volume: 6 Issue: 7 April : 2022 Rs.20/-








## ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு, கோட்டூர், சென்னை – 600 085. தொலைபேசி : 044 – 2447 4744

# சித்ரா பௌர்ணமி திருவிழா – 2022

ஸ்வஸ்தி ஸ்ரீ சுபகிருது வருடம் சித்திரை மாதம் 2ம் மற்றும் 3ம் தேதி (15.04.2022) வெள்ளிக்கிழமை மற்றும் (16.04.2022) சனிக்கிழமை ஆகிய இரு தினங்களுக்கு கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்படி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம குங்குமார்ச்சனை, ஸ்ரீ நவாவரண பூஜை, ஸ்ரீசண்டி பாராயணம் மற்றும் ஸ்ரீசண்டி ஹோமம் மற்றும் அபிஷேகங்கள் ஸகிதம் சித்ரா பௌர்ணமி விழா நடைபெற உள்ளன. பக்த கோடிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஸ்ரீஅம்பாளின் பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இடம் :

## அருள்மிகு ஸ்ரீ மதுரகாளியம்மன் ஆலயம்

சிறுவாச்சூர், பெரம்பலூர், மாவட்டம்

முன்னிலை :

**ஸ்ரீ பரிபூரணாம்பா ஸமேத**

**ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மதுராம்பிகாநந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள்**

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 15.04.2022 வெள்ளி | காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி | அகண்ட ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம குங்குமார்ச்சனை |
| | மாலை 3.00 மணி முதல் இரவு 8.00 மணி | ஸ்ரீ நவாவரண பூஜை |
| 16.04.2022 சனி | காலை 6.30 மணி முதல் காலை 7.30 மணி | ஸ்ரீ குருவுக்கு பாத பூஜை |
| | காலை 8.00 மணி முதல் காலை 11.30 மணி | புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ப்ரணவானந்த பிரஹ்மேந்திர சரஸ்வதி அவதூத சுவாமிகளால் நடத்தப்படும் ஸ்ரீ சண்டி ஹோமம் |
| | பகல் 12.00 மணி | ஸ்ரீ மதுரகாளியம்மனுக்கு அபிஷேக ஆராதனை |

இப்படிக்கு

**N. சுப்ரமணியம்**

நிர்வாக அறங்காவலர்

ஸ்ரீ மஹா மேரு மண்டலி

**குறிப்பு :** 1. அனுமதிச் சீட்டு வைத்துள்ளவர்கள் மட்டுமே பாராயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.
2. பாராயணம் செய்ய அனுமதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கப்படும்.

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 31

**ப்ரணவோ தநு: சரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம**
**தல்லக்ஷ்யமுச்யதே/**

**முண்டகோபநிஷதம்.**

**பொருள் :** ஓங்காரமே வில்; ஜீவன் என்கிற பாணத்தை (அம்பு) ப்ரம்மம் என்கிற லக்ஷ்யத்தில் சேர்ப்பதற்கு வேண்டிய வில்லே ஓங்காரம்.

ஓங்காரத்தின் மூலம் கற்பனையான ஜீவத்துவத்தை விட்டு ஸ்வரூபமாகிய ப்ரஹ்மத்தில் ஒன்றாக இணைய வேண்டும் என்பதே தாத்பரியம்.

|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 6 இதழ்: 7

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி, செ-42.
போன்: 9025864231

## புத்தகத்தின் உள்ளே

ஒரு நிமிடம் உங்களோடு... *7*
அட்டைப்பட விளக்கம் *9*
சித்திரை மாத விசேஷங்கள் *11*
ஸ்ரீமத் பகவத்கீதை *12*
ஸ்ரீமத் பாகவதம் *15*
ஔவையார் *18*
ஸ்ரீ ஆதிசங்கரர் *19*
மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் *23*
தர்மத்தின் குரல் *24*
சிருங்கேரி மஹா சுவாமிகள் வேதவாக்கு *25*
குழந்தைகள் பகுதி *27*
ஆர்.பி.வி.எஸ். மணியன் *31*
பெற்றோர்களே கவனியுங்கள் *33*
பாவையில் வாழ்வியல் *37*
சாதனை பறவைகள் *43*
உறவுகள் தொடர்கதை *46*
பெரிய அன்பின் வரகுண பாண்டியன் *48*
பசு சர்வரோக நிவாரணி *50*

# வேதபாரதி செய்திகள்

## "சுபகிருது" வருடத்திய "சித்திரை" மாத சிறப்பிதழ்

தமிழ் ஆண்டுகள் அறுபது ஆண்டுகளைக் கொண்டச் சுற்றுகளைக் கொண்டது. **"பிரபவ"** என்னும் பெயருடைய ஆண்டில் ஆரம்பித்து **"அட்சய"** என்றபெயருடைய ஆண்டில் முடியும். பிறகு மீண்டும் **"பிரபவ"** வில் ஆரம்பிக்கும். இந்த வரிசையில் வரும் 14.04.2022 வியாழக்கிழமை பிறக்கும் ஆண்டின் பெயர் **"சுபகிருது"**. இது அறுபது ஆண்டுகளில் 36-வது ஆண்டாகும். **"சுபகிருது"** என்றால் நற்செய்கை என்று பொருள். இந்த ஆண்டு பல்வேறு நன்மைகள் தரும் ஆண்டாக இருக்கும்.

இந்த புத்தாண்டில் **"வேதபாரதி செய்திகள்"** அன்பு வாசகர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் மேலும் மாதாமாதம் பத்திரிகை குறித்த காலத்தில் வெளிவர பேருதவியாக இருக்கும் மற்றஅனைவருக்கும் வேதபாரதி தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த சிறப்பு இதழில் மாதா மாதம் வெளியாகும் கட்டுரைகளுடன் வேதபாரதி அமைப்பு கடந்த ஓராண்டாக சென்னை, சென்னை ஊரப்பாக்கம், மதுரை மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் நேரிடையாகவும் ஆன்லைனில் ZOOM வழியாகவும் நடத்திய நிகழ்ச்சிகளின் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து உங்களின் ஆதரவை அளித்திட அன்புடன் வேண்டுகிறோம்.

ஆசிரியர்.

# வேதபாரதி செய்திகள்

## சந்தாதாரர்களுக்கு ஓர் வேண்டுகோளும், அறிவிப்பும்

*ஒரு ஆண்டு சந்தா ரூ.200/-*
*10 ஆண்டு சந்தா ரூ,1500/-*

*2021 ஏப்ரல் மாதம் ஓர் ஆண்டு சந்தா செலுத்தியவர்களின் சந்தா காலம் 2022 மார்ச் மாதத்துடன் முடிவடைந்துவிட்டது. இந்த ஒரு மாதம் (ஏப்ரல் 2022) அவர்களுக்கு புத்தகம் இலவசமாக அனுப்பப்பட்டுள்ளது. 30.04.2022 க்குள் அவர்கள் சந்தா தொகையை செலுத்தி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். புதுப்பிக்கவில்லையெனில் 2022 மே மாதம் முதல் அவர்களுக்கு "வேதபாரதி செய்திகள்" புத்தகம் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.*

*சந்தாவை புதுப்பித்துக் கொள்பவர்களும், புதியதாக சந்தா செலுத்த விரும்புகிறவர்களும், சந்தா தொகையை காசோலை அல்லது* DD *மூலம் செலுத்தலாம். காசோலை அல்லது* DD *யை* **VEDABHARATHI** *என்ற பெயரில் எடுத்து கீழ்க்கண்ட நிர்வாக முகவரிக்கு தங்களுடைய முழுவிலாசத்துடனும் கைபேசி எண்ணுடனும் அனுப்ப வேண்டும்.*

**"வேதபாரதி"**

*எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு,*
*பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.*

*சந்தா தொகையையோ, நன்கொடையையோ வங்கி மூலம் வழங்கிட விவரங்கள்.*

**VEDABHARATHI**
**CITY UNION BANK,VELACHERY BRANCH**
**A/C NO. 510909010005286 | IFSC : CIUB 0000262**

Ph 94434 95950 | Email: vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

## ஒரு நிமிடம் உங்களோடு...

# 45. அறிவு

நாம் அறியாத ஒன்றைஅறியும்போது நாம் ஒன்றைப்பற்றி அறிந்துக்கொள்கிறோம். அப்படி அறியப்படுவதுதான் "அறிவு". இதைத்தான் கிரேக்க தத்துவ ஞானியான "பிளேட்டோ" ஒரு பொருளைக் குறித்து ஆய்வுகள் செய்து நிரூபிக்கப்பட்ட கருத்துகளின் தொகுப்பே அறிவு' என்று கூறினார்.

ஒருவருக்கு பொன், வீடு, மாடு, மனைவி மக்கள் என்று எல்லாம் இருந்து 'அறிவு' என்றஒன்று இல்லையானால் அவர் அவமதிப்பிற்குட்படுவார் என்கிறார் திருவள்ளுவர்.

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர். (குறள் 430)**

**பொருள் :** அறிவுடையார் பொருள் இலாரானாலும் எல்லாம் உடையவரேயாவர். அறிவில்லாதவர் என்ன உடையவராயினும் ஒன்றும் இல்லாதவரேயாவர்.

இராமாயணத்தில் வாலி தன் தம்பி சுக்ரீவனை நாட்டை விட்டு துரத்தியபோது சுக்ரீவன் ராமனின் துணையை நாடினான். பிறகு மீண்டும் வாலியிடம் வந்து போருக்கு அழைத்தான். வாலியும் போருக்கு ஆயத்தமானான். அப்போது அவனுடைய அறிவுடைய மனைவி "தாரை" வாலியிடம், 'தங்களிடம் தோல்வி அடைந்து ஓடிய சுக்ரீவன் தங்களை மீண்டும் போருக்கு அழைக்கிறான் என்றால் அதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. அவனுக்கு இப்போது ராமனின் உதவி கிடைத்துள்ளது. எனவே போரைத் தவிர்த்துவிடுங்கள்' என்றாள். ஆனால் அவளுடைய அறிவுரையைக்

கேட்காத வாலி போருக்குச் சென்று ராமனின் அம்புக்கு இரையானான். அறிவுடைய அவன் மனைவியின் சொல்லை கேட்கவில்லை.

அறியாமை தேயத்தேய துன்பம் தொலையும். அறிவு வளர வளர இன்பம் வளரும். அறியாமையை அகற்றி அறிவை வளர்க்க சிறந்த அறிவு நூல்களை படிக்கவேண்டும். பலவற்றையும் அறிந்த ஒருவன் தன் அறிவை பிறர் நன்மைக்காக பயன்படுத்தும்பொழுது அவனை சிறந்த அறிவாளி என்று மற்றவர்கள் போற்றுவார்கள்.

ஆகையால் ஒவ்வொருவரும் அறிவு நூல்களை விரும்பி படிக்க வேண்டும். அறிவு நிறைந்த ஆன்றோர்களுடன் நாள்தோறும் சில நிமிடமாவது பழகவேண்டும்.

**இனிது இனிது அறிவுள் ளோரைக்**
**கனவிலும் நினைவிலும் காண்பது தானே.**
**(ஔவையார்).**

**D. சூரியநாராயணன்**

# மேற்குமாம்பலம் வேதபாரதி பொறுப்பாளர்கள்

1. ஸ்ரீ கண்ணன்
2. ஸ்ரீ குமாரசுவாமி
3. ஸ்ரீ பாஸ்கர்
4. ஸ்ரீ தர்மசுப்ரமணியம்

தொடர்ந்து பல ஆண்டுகளாக வேதபாரதிக்கு ஆதரவு அளித்து வரும் பொறுப்பாளர்களை மனதார பாராட்டுகிறோம்.

# அட்டைப்பட விளக்கம்

## ஸ்ரீ மத்ஸ்ய ஜயந்தி

*முந்தைய கல்பத்தின் முடிவில் நைமித்திகம் என்னும் பிரளயம் உண்டாயிற்று. பிரளய ஜலத்தில் சகல லோகமும் மூழ்கின.*

*பிரளயம் முடிந்து உலகம் சகஜ நிலையை அடைந்தபோது பூபாகம் மேலெழுந்து சூரியன் தோன்றியது.* **"பிரம்மா"** *தன் படைப்புத் தொழிலை ஆரம்பித்தார். ஆனால் அதற்கான சக்தி அவரிடம் ஏற்படவில்லை காரணம் பிரம்மாவிடமிருந்த வேதங்களை* **"சோமுகாசூரன்" (அயக்ரீவன்)** *என்னும் அரக்கன் அபகரித்துச் சென்று சமுத்திரத்தின் அடியில் ஒளிந்து கொண்டான். வேதங்கள் இன்றி சிருஷ்டி காரியத்தை நடத்த இயலாத* **"பிரம்மா"** *பகவான் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை தியானித்து வேதங்களை மீட்டுத்தர வேண்டினார்.*

*பிரம்மாவின் வேண்டுகோளை ஏற்றஸ்ரீ மஹாவிஷ்ணு மத்ஸ்யமாக (மீனாக) அவதாரம் எடுத்து கடலில் ஒளிந்திருந்த* **"சோமுகாசூரன்"** *என்னும் அரக்கனை போரில் வதம் செய்து வேதங்களை மீட்டு பிரம்மாவிடம் ஒப்படைத்தார்.*

*ஸ்ரீ மஹாவிஷ்ணு மத்ஸ்யமாக அவதாரம் எடுத்து வேதங்களை மீட்ட நாளை* **"மத்ஸ்ய ஜயந்தி"** *என்று (சித்திரை மாதத்தில் வரும்) கொண்டாடுவது மரபு.*

**"சத்தியவிரதன்"** *என்றஅரசனுக்கும் அவனைப் போன்ற மற்ற பக்தர்களுக்கும் பிரம்ம ஞானத்தை உபதேசிப்பதற்காகவும் இந்த மத்ஸ்யாவதாரம் காரணமாக இருந்தது என ஸ்ரீமத் பாகவத புராணம் இயம்புகிறது.*

*பகவான் மஹாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களில் முதல் அவதாரம்* **"மத்ஸ்ய அவதாரம்".**

*பகவானுக்கு மிகவும் பிடித்த அவதாரம் இது.*

*மத்ஸ்யாவதார கோலத்திலேயே திருக்கோயில் கொண்டு அருள்புரியும் திருமால் ஆலயத்தை ஆந்திர மாநிலத்தில் உள்ள* **“நாகலாபுரம்”** *என்னும் ஊரில் காணலாம். மத்ஸ்ய அவதாரத்திலேயே மூலவராக தனி சந்நிதி கொண்டு அருள்புரிவது இங்கு மட்டுமே 16-ம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர் கிருஷ்ண தேவராயரால் அவரின் தாயாரின் நினைவாக இக்கோயில் கட்டப்பட்டதாக சரித்திரம் கூறுகிறது.*

*இத்தலம் திருப்பதிக்கு தென்கிழக்கே 70 கி.மீ. தொலைவில் உள்ளது. சென்னை பெரியபாளையம் அடுத்துள்ள* **“சுருட்டப்பள்ளி”** *சிவன் கோயிலிலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருத்தணியிலிருந்தும் செல்லலாம். ஆன்மீக அடியார்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய திருத்தலம் இது.*

*விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் அருகே தென்பெண்ணையாற்றின் தென் கரையில் “ஆதி திருவரங்கம்’ என்ற ஒரு ஊர் உள்ளது. இங்கு ஒரு பெருமாள் கோயில் உள்ளது. இங்குதான் பெருமாள் வேதங்களை கொண்டுவந்து பிரம்மாவுக்கு கொடுத்தார் என்று புராணம் கூறுகிறது.*

*சமீபத்தில் சென்னையில் கடற்கரை சாலையில் ‘மத்ஸ்ய நாராயண பெருமாள்’ கோயில் ஒன்று உருவாகியுள்ளது. இது தமிழக மக்களை மிகவும் கவர்ந்துள்ளது.*

*இந்த வருடம் “மத்ஸய ஜயந்தி” 28.04.2022, திங்கட்கிழமை அன்று நிகழவுள்ளது. அன்றைய தினம் பகவான் மஹாவிஷ்ணுவை 16 உபசார பூஜை செய்து அதற்கான மந்திரத்தைச் சொல்லி அர்க்கியம் கொடுக்கலாம்.*

**D. சூரியநாராயணன்**

## சுபக்ருது வருஷம் - சித்திரை மாத விசேஷங்கள்

**(ஏப்ரல் 14.04.2022 முதல் மே 14.05.2022 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 14.04.2022 | சி 1 | வியாழன் | சித்திரை புத்தாண்டு சுபக்ருது |
| 16.04.2022 | சி 3 | சனி | சித்ரா பௌர்ணமி |
| 19.04.2022 | சி 6 | செவ்வாய் | சதுர்த்தி |
| 21.04.2022 | சி 7 | வியாழன் | ஸ்ரீ வராஹ ஜயந்தி |
| 22.04.2022 | சி 9 | வெள்ளி | சஷ்டி |
| 26.04.2022 | சி 13 | செவ்வாய் | ஏகாதசி |
| 28.04.2022 | சி 15 | வியாழன் | பிரதோஷம், ஸ்ரீ மத்ஸ ஜயந்தி |
| 29.04.2022 | சி 16 | வெள்ளி | சிவராத்ரி |
| 30.04.2022 | சி 17 | சனி | அமாவாசை |
| 03.05.2022 | சி 20 | செவ்வாய் | அட்சயத்திருதியை |
| 04.05.2022 | சி 21 | புதன் | சதுர்த்தி |
| 05.05.2022 | சி 22 | வியாழன் | ஸ்ரீ ராமானுஜர் ஜயந்தி |
| 06.05.2022 | சி 23 | வெள்ளி | ஸ்ரீ சங்கரர் ஜயந்தி |
| 07.05.2022 | சி 24 | சனி | சஷ்டி |
| 12.05.2022 | சி 29 | வியாழன் | ஏகாதசி |
| 13.05.2022 | சி 30 | வெள்ளி | பிரதோஷம் |
| 14.05.2022 | சி 31 | சனி | ஸ்ரீ நரசிம்ம ஜயந்தி |

### 30.04.2022 சனிக்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே உத்தராயணே வசந்தருதௌ மேஷமாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாயம் புண்யதிதௌ ஸ்திரவாஸர யுக்தாயாம் அஸ்வனி நக்ஷத்ரயுக்தாயாம் ஸகல விஷேசன விஷிஸ்டாயாம் அஸ்யாம் அமாவாஸ்யாம் புண்யதிதௌ அமாவாஸ்ய புண்யகாலே தர்ஸ ஸ்ராத்த ப்ரதிநிதி தில தர்ப்பண ருபேன அத்ய கரிஷ்யே.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 36



## அத்தியாயம் – 2
## "ஸாங்கிய யோகம்"

பரமாத்மாவை அடையவேண்டும் என்றஎண்ணம் ஏன் மனிதனுக்கு எளிதாக ஏற்படுவதில்லை என்றசந்தேகம் அர்ஜுனனுக்கு ஏற்படுகிறது. அதற்கு பகவான் 42, 43, 44 ஆகிய மூன்று ஸ்லோகங்களிலும் அர்ஜுனனுக்கு விவரிக்கிறார்.

**யாமிமாம் புஷ்பிதாபம் வாசம் ப்ரவத[3]ந்த்யவிபஸ்சித:/**
**வேத[3]வாத[3]ரதா பார்த[2] நாந்யத[3]ஸ்தீதி வாதி[3]ந// (கீ.2-42)**
**காமாத்மாந ஸ்வர்க[3]பரா ஜந்மகர்மப[2]லப்ரதா3ம்**
**க்ரியாவிஸேஷப[4]ஹுலாம் போகை ஸ்வர்ய[3]திம் ப்ரதி// (கீ 2-43)**
**போ[4]கை[3]ஸ்வர்யப்ரஸக்தாநாம் தயாபஹ்ருதசேதஸாம்**
**வ்யவஸாயாத்மிகா பு[3]த்[3]தி[4] ஸமாதௌ ந விதீ[4]யதே// (கீ 2-44)**

**கீதை 2-42** = வேத மொழியில் விருப்பமுடையவர்கள் ஸ்வர்க்கத்தை விளைவிக்கிற கருமத்துக்கு அன்னியம் ஒன்றும் இல்லை என்பார்கள்.

**ப்ரவத[3]ந்த்யவிபஸ்சி** = **'பவந்திஅவிபஸ்சித'** வேண்டிய

அறிவில்லாதவர்கள். அவர்கள் அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டியதை தெரிந்து வைத்திருப்பார்கள். அதனால் அவர்கள் **“புஷ்பிதம் வாசம்’’** அலங்காரமான வார்த்தைகளைக் கூறிக்கொண்டு, **“வேதவாதரதா’’** வேதங்களை வியாக்யானிப்பார்கள். அதாவது வேதங்களை தவறாக வியாக்யானம் செய்து நம்மை நம்பவைப்பார்கள். **“நான் அன்ய தஸ்தீ** = இது தவிர வேறு வழி இல்லை என்று கூறி நம்மை ஏமாற்றுவார்கள்.

வேதம் பல அங்கங்களைக் கொண்டது. அதில் ஒரு அங்கம் யாகம், ஹோமம் போன்றவற்றைச் செய்தால் இவை கிடைக்கும் என்று சொல்கிறது. பிள்ளை இல்லையா இந்த யாகம் செய், மழை வரவில்லையா அதற்கு ஒரு யாகம் என்று கூறுகிறது. கீதை வேதத்தின் அந்தப் பாகத்தை கண்டிக்கிறது. அதுவும் வன்மையாக **“அலங்கார வார்த்தைகள்”** என்று சாடுகிறது.

முற்காலத்தில் இருந்த பண்டிதர்கள், வேத விற்பன்னர்கள் நமக்கு நல்லதைச் சொல்லிக் கொடுத்து நம்மை நல்வழிக்கு நடத்திச் சென்றார்கள். ஆனால் இன்றைய சாஸ்திரிகள் சிலர் அந்த வேதங்களைக் கூறி நம்மை மானசீகமாக உயர்த்துவதற்குப் பதிலாக தங்களுடைய சுய சம்பாத்தியத்திற்காக (Selfish Motivation ) அந்த வேதங்களைக் கூறி நம்மை பயமுறுத்தி தவறான வழிக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

**கீதை 2 -44** = இந்த ஸ்லோகத்தில் பகவான் மேலும் வலியுறுத்தி கூறுகிறார்.

நாளைக்கு நல்ல காலம் வரும் என்று எண்ணி இன்று ஹோமமும் பூஜையும் செய்து ஒரு கற்பனையில்

வாழ்க்கையை நடத்துபவர்களை பகவான் **“போ⁴கை³ஸ்வர்யப்ரஸக்தாநாம்’’** அதாவது போகத்திலும் ஐஸ்வர்யத்திலும் மிகவும் பற்று கொண்ட மனிதர்களுக்குப் பரமாத்மாவிடம் ஒரே உறுதியான பக்தி ஏற்பட இயலாது. இப்படி வாழ்பவர்களுக்கு **“வ்யவஸாயாத்மிகா பு³த்³தி⁴ ந விதீ⁴யதே’** = உறுதியான புத்தி உண்டாவதில்லை என்கிறார் பகவான்.

“கழுகு ஆகாயத்தில் உயரப் பறக்கிறது. ஆனால் கீழே எங்கு அழுகிய பிணம் கிடக்கிறது என்பதிலேயே அது கண்ணும் கருத்துமாக இருக்கிறது. வேத ஸாஸ்திரங்களை எவ்வளவு கற்றிருந்தாலும் காமவசப்பட்டிருக்குமளவு அந்த சில சாஸ்திரிகள் கழுகு போன்றவர்களேயாவர். காமமும், காசும், ஆசையும் உள்ளத்தில் குடிகொண்டிருக்குமளவு ஈஸ்வர லாபத்தை அடையமுடியாது’’ — ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்.

கீதை தொடரும்...

## பெண்மையைப்போற்றுவோம் குழுவினர்

| | |
|---|---|
| செல்வி சுபஸ்ரீ | ஸ்ரீமதி பூர்ணிமா |
| செல்வி ஹேமலதா | ஸ்ரீமதி சிவசங்கரி |
| செல்வி மஹாலட்சுமி | செல்வி பூர்வஜா |
| செல்வி ஆர்த்தி | செல்வி சுஸ்மிதா |
| செல்வி ஐஸ்வர்யா லக்ஷ்மி | செல்வி உமாமகேஷ்வரி |
| செல்வி மதுரிமா | செல்வி விஜயலக்ஷ்மி |
| செல்வி பரிஷ்கிருதா | செல்வி யுவராணி |

**பிரதி மாதம் கடைசி ஞாயிறு மாலை பெண்மையைப் போற்றுவோம் நிகழ்ச்சி நடைபெற ஒத்துழைப்பு நல்கும் குழுவினை பாராட்டுகிறோம்.**

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி

பகுதி - 16



*பரீக்ஷித் ராஜன்* **"கலிபுருஷன்"** *தங்குவதற்கு (1) சூதாடும் இடம் (த்யூதம்) (2) மது அருந்தும் இடம் (3) ஆசாரம் இல்லாத ஸ்த்ரீகள் இருக்கும் இடம் (அதாவது வேசி இல்லம்) (4) பிராணிகள் வதை நடக்கும் இடம் மற்றும் (5) தங்கம் (பொன்னாசை இருக்கும் இடம்) ஆகிய ஐந்து இடங்களைக் கொடுத்தார்.*

**யஸ்மின் க்ருஷ்யோதிவம் யாதஸ் தஸ்மினேவ ததாஹறதி:/**

**ப்ரதிபந்தம் கலியுக மிதி ப்ராஹு: புராவித://  (பா 12-2-33)**

*பொருள் : எந்த தினத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் வைகுண்டம் சென்றாரோ அதே தினத்தில், அதே க்ஷணத்தில் கலியுகம் ஆரம்பம் ஆயிற்று என்று பழமையறிந்தவர் கூறுகின்றனர்.*

*பகவானின் காலசக்ரத்தின்படி தற்போது கலியுகம் நடந்துகொண்டு இருக்கிறது. நாம் கலியுகத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சுமார்*

*5000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஸ்ரீமத்பாகவதத்தில் கலியுகத்தில் மனிதர்கள் எப்படி எல்லாம் இருப்பார்கள் என்று மிகத் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. அவற்றை இன்றைய நிலையோடு ஒப்பிட்டு பார்த்தோமானால் அந்த தீர்க்கதரிசனத்தின் உண்மை புலப்படும்.*

*ஸ்ரீமத் பாகவதத்தில் 12வது ஸ்கந்தகத்தில் 2ஆவது மற்றும் 3ஆவது அத்தியாயத்தில் கலியுகத்தில் என்னவெல்லாம் நடக்கும் என்பது குறித்து வர்ணிக்கப்பட்டுள்ளது.*

1. *தர்மம், சத்தியம், தூய்மை, பொறுமை, கருணை, மனிதனின் ஆயுள், தேகபலம், ஞாபகசக்தி ஆகியவை நாசமடையப் போகின்றன (பா.12-2-1)*
2. *பிராமணர்கள் தங்களுடைய நித்திய கர்மாக்களை விட்டுவிட்டு ஆசாரமற்றவர்களாக இருப்பார்கள். ஒருவன் பூணூல் அணிந்து இருப்பதால் மட்டுமே பிராமணர் என்று சொல்லப்படுவான் (பா 12-2-3) ஆண்கள் அபரிமித மோகத்தால் மனைவியை விட்டு மற்ற பெண்களை நாடுவார்கள். பெண்களும் அப்படியே (இதை தினமும் நாம் செய்தித்தாள்களில் படிக்கிறோம்)*
3. *கலிதோஷத்தால் மனிதர்கள் அற்ப புத்தி உடையவர்களாகவும், ஸ்திரீகள் விபசாரிகளாகவும், கற்பற்றவர்களாகவும் ஆவார்கள். தர்மமான திருமணங்கள் நடைபெறாது. (பா 12-3-31). இளம் பெண்கள் காதலில் சிக்கி வீட்டைவிட்டுப் போய் மற்றமதத்தைச் சேர்ந்தவனை திருமணம்*

செய்துகொள்வதை தினசரி பார்க்கிறோம். மங்கையர்கள் பணம் இல்லாத கணவனை விட்டு யாரிடம் பணம் இருக்கிறதோ அவனையே புருஷனாகத் தேடிச் செல்வார்கள்.

4. நாட்டில் திருட்டு அதிகமாகும். வேதங்கள் கெட்டுப்போகும். அரசாங்கம் அதிக வரியால் மக்களை துன்புறுத்தும். மூவர்ணத்தாரும் விஷயசுகம் அனுபவிப்பதிலும் வயிறு வளர்ப்பவர்களாகவும் இருப்பார்கள். (பா 12-3-32)
5. ஸன்யாசிகள் பேராசை கொண்டவர்களாக இருப்பார்கள். (பா 12-3-33)
6. பிராமணர்கள் அக்கினி பூஜை, தேவ பூஜை, அதிதி பூஜை, பிண்டோதக தானரூபமான பித்ரு பூஜை முதலியவற்றைச் செய்யாமல் குளிக்காமலும் கூட இருந்து உணவருந்தி காலம் கழிப்பார்கள்.
7. காம இச்சையே திருமணத்தின் பிரதான நோக்கமாக இருக்கும்.
8. மக்கள் ஒரு ஆன்மீக பிரிவில் இருந்து இன்னோர் மதத்திற்கு மாறிச்செல்வார்கள்.
9. பெண்ணின் அழகு என்பது பெரும்பாலும் சிகை அலங்காரத்தை பொறுத்ததாக இருக்கும் (தலை முடி அலங்காரம்)
10. பிள்ளைகள் தங்கள் தாய் தந்தையரை காப்பாற்றமாட்டார்கள்.

இன்னும் ஏராளம் ஏராளம். இவை அத்தனையும் தற்போது நடந்துக்கொண்டிருக்கின்றன.

தொடரும்...

**பசு பாதுகாப்பு குழு :** V. சௌந்தரராஜன், புழுதிவாக்கம் நாராயணன், R. வெங்கட்ராமன்.

# ஔவையார்

ஒவ்வொரு மாதமும் "ஔவையார்" அருளிய **நல்வழி** நூலிலிருந்து மாதம் ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் இந்தப் பகுதியில் வெளியாகும்.

**பாடல் 11**

**ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்**
**இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் – ஒரு நாளும்**
**என் நோவு அறியாய் இடும்பை கூர் என் வயிறே!**
**உன்னோடு வாழ்தல் அரிது.**

**பொருள் :** என் வயிறேஇன்று உணவு கிடைக்கவில்லை இன்று ஒரு நாளைக்கு மட்டும் சாப்பிடாமல் இரு என்று சொன்னால் இருக்கமாட்டேன் என்கிறாய். வயிற்றுப் பசி கிள்ளுகிறது. இன்று நிறைய கிடைக்கிறது. இரண்டு நாளைக்குச் சாப்பிட்டுக்கொள் என்று சொன்னாலும் சாப்பிடமாட்டேன் என்கிறாய் உணவுக்காக நான் போராடும் துன்பம் உனக்கு தெரியவில்லை. உடம்பு துன்பத்தை அதிகமாக்கிக் கொண்டே இருக்கிறாய். எப்படியும் உன்னோடு நிம்மதியாக வாழ முடியவில்லை.

**விளக்கம்:** நம்முடைய வயிற்றைப்பற்றி "ஔவையார் எவ்வளவு சரியாக புரிந்து வைத்துள்ளார் பாருங்கள். நம் வயிற்றைப் பார்த்து "வயிறே இன்றைக்கு எனக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை. உனக்கும் விடுமுறைஅளிக்கிறேன். அதாவது ஒருநாள் சாப்பாடு கிடையாது என்று சொன்னால் வயிறு கேட்குமா? பசி வயிற்றைக் கிள்ளும். ஒரு நாள் என் நண்பனின் திருமணத்திற்கு போயிருந்தேன். அறுசுவை விருந்து பரிமாறினார்கள். அப்போது "வயிறே இன்று நல்ல விருந்து கிடைத்துள்ளது. மூன்று நாட்களுக்கு வேண்டியதை சேர்த்து ஏற்றுக்கொள் என்றாலும் கேட்பதில்லை. இப்படிப்பட்ட வயிற்றோடு வாழ்தல் துன்பம் என்கிறார் ஔவையார்.

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 1 அவதார மஹிமை பாகம் 7**

## அத்தியாயம் – 2
## ஜகத்குருவின் அவதாரம்



*சென்றமாதம் தொடர்ச்சி ...*

*சிவகுருவின் கனவில் கேட்ட அசரீரி... இதுதான்* **"விருஷாசலம்"** *நீ இங்கு வந்து இங்குள்ள சிவலிங்கத்தை பூஜிக்க வேண்டும்" என்றது.*

*சிவகுருவும், ஆர்யாம்பாளும் அடுத்த ஒரு சுபதினத்தில் காலடியிலிருந்து யாத்திரை செய்து* **"விருஷாசலம்"** *என்னும்* **"திரிசிவப்பேரூர்"** *சென்றடைந்தனர்.*

*("விருஷம்" என்றால் "நந்தி" என்று பொருள். "திரிசிவப்பேரூர்" என்ற பெயர் நாளடைவில் "திருச்சூர்" என்று ஆகிவிட்டது. தற்போது திருச்சூரில் உள்ள சிவனுக்கு "வடக்குநாதர்" என்று பெயர். அந்த காலத்தில் வடக்குநாதர் கோயிலுக்கு அருகில்தான் "ஆல்வாய்" நதி ஓடிக்கொண்டிருந்தது?*

*கோயிலுக்குச் சென்றடைந்த சிவகுரு தம்பதியர் ஒரு மண்டலம் (41 நாட்கள்) ஒரு புத்திரன் வேண்டி வடக்குநாதனை பூஜித்து "பஜனம்'' (விரதம்) இருந்தார்கள் (தினமும் விடியற்காலையில் குளித்து வெறும் பால் மட்டுமே அருந்தி விரதம் இருந்து சிவனை பூஜிப்பதை "பஜனம்'' என்பார்கள்)*

*ஒரு நாள் சிவகுருவின் கனவில் தோன்றிய சிவன் சிவகுருவின் பக்தியை மெச்சி புத்திரவரம் தருவதாக கூறி ஒரு கேள்வியைக் கேட்டார். "உமக்கு நீண்ட ஆயுளுடைய, மந்த புத்தியுள்ள பல குழந்தைகள் வேண்டுமா? அல்லது அறிவு ஜோதியாக அல்பாயசு காலமே இருக்கக்கூடிய ஒரு குழந்தை வேண்டுமா? என்று கேட்டார்.*

*(மார்கண்டேயரின் தந்தையிடமும் பகவான் இதே கேள்வியைத்தான் கேட்டார்)*

*"வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுவதும் தருவோய் நீ...' என மாணிக்க வாசகர் திருவாசகத்தில் பாடியதுபோல் பக்தன் வேண்டியதைத் தருபவன் இறைவன். அதனால் சிவகுரு பகவானிடம் "பகவான் எங்களுக்கு எது நன்மை பயக்கும் என்று எண்ணுகிறீரோ அது உமது திருவுளப்படி ஈடேற வேண்டும்' என வேண்டினார். சிவன் தானே அவர்களுக்கு புத்திரனாக அவதரிப்பதாகச் சொல்லி, ஆனால் எட்டு வயது வரை மட்டுமே இருப்பேன் என கூறி மறைந்தார்.*

*கனவு முடிந்து விழித்த சிவகுரு மீதமுள்ள இரவை அந்த சிவஸ்தலத்திலேயே கழித்தார். அதே இரவில் ஆர்யாம்பாள் தேவியும் தன் கர்பத்திற்குள் ஒரு ஜோதி பிழம்பு புகுவதை கண்டாள்.*

*மறுநாள் இருவரும் காலடியில் உள்ள தங்கள் இல்லம் திரும்பினார்கள்.*

**வடக்கு நாதர் கோயில் வரலாறும் அமைப்பும் :**

*இக்கோயிலின் தோற்றம் பற்றிய கதை பிரம்மந்த புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் பரசுராமரால் நிறுவப்பட்டு 1300 ஆண்டுகள் பழமையானது. இந்த ஆலயத்தைச் சுற்றியே திருச்சூர் நகரம் அமைந்துள்ளது. கோயில் சுமார் 8 ஏக்கர் நிலத்தில் நான்கு திக்கிலும் கோபுர வாசலுடன் அமைந்துள்ளது.*

*இங்குள்ள மூலவர் சிவன் பெயர் "வடக்கு நாதர்". வட்டவடிவிலான கருவறையில் சிவன் மேற்கு நோக்கிய நிலையில் உள்ளார்.*

*அர்ஜுனனுக்கும் சிவனுக்கும் நடந்த போரில் சிவன் தலையில் அடிப்பட்ட காயத்திற்கு "தன்வந்திரி பகவான்" நெய் தடவி சிகிச்சை செய்ய இரத்தம் நின்றதாக தலவரலாறு. மூலவருக்கு நீரினால் அபிஷேகம் செய்வதில்லை. பல வருடங்களாக நெய்யால் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. அதனால் நெய் உறைந்து சிவலிங்கத்தையே மறைத்துவிட்டது.*

*சிவலிங்கம் 12 அடி உயரமும் 25 அடி அகலமும் கொண்டது. அமர்நாத்தில் பனிலிங்கம் உள்ளது போல் இங்கு "நெய் லிங்கம்". நெய்யை எறும்பு அல்லது மற்ற பூச்சிகள் அண்டாது. இந்த நெய்க்கு மணம் கிடையாது. இது பிரசாதமாக வழங்கப்படுகிறது. இந்த நெய் லிங்கம் எப்போதும் 13 படிப்படியான தங்கப் பிறைகள், அதன் மேலே மூன்று படமெடுக்கும் நாகங்கள் கொண்ட தகட்டால் மூடப்பட்டிருக்கும் பொதுவாக சிவன் கோயில்களில் நந்தி சிவனுக்கு எதிரில் இருக்கும். ஆனால் இந்த கோயிலில் நந்தி விலகி தனி மண்டபத்தில்*

இருக்கிறது.

கருவறையின் பின்புறம் அமைந்திருக்கும் சன்னிதியில் பார்வதி தேவி கிழக்கு நோக்கியபடி வீற்றிருக்கிறார். மேலும் ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட ராமர், சங்கரநாராயணர், கணபதி ஆகியோருக்கு தனிச் சன்னதிகள் உள்ளன. இந்த ஐந்து தெய்வங்களுக்கும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியாக வழிபாடு நடத்தப்படுகிறது.

கேரளாவின் புகழ் பெற்ற பூரம் திருவிழா இந்த கோயிலில் ஏப்ரல் – மே மாதங்களில் நடைபெறுகிறது. இதில் 100க்கும் மேற்பட்ட யானைகள் கலந்துக்கொள்ளும்.

இக்கோயில் 2015-ம் ஆண்டு பாதுகாப்பு பிரிவில் யுனெஸ்கோவின் “ஆசிய பசிபிக் பாரம்பரிய” விருதை பெற்றுள்ளது.

*சங்கரர் வாழ்க்கை தொடரும்...*

## திருப்பாவை திருவெம்பாவை குழுவினர்

ஸ்ரீ ராமசுப்ரமணியம், தாம்பரம்

ஸ்ரீ நாராயணன், தாம்பரம்

ஸ்ரீ முரளிதரன், மதுரை

ஸ்ரீமதி உஷா ரமேஷ், மயிலாப்பூர்

ஸ்ரீமதி பூர்ணிமா, பாண்டிச்சேரி


ஸ்ரீமதி ரூபா அனந்தராமன்

ஸ்ரீமதி சிவசங்கரி, வேளச்சேரி

ஸ்ரீமதி பூர்ணிமா, வேளச்சேரி

**பிரதி ஆண்டு பள்ளி சிறார், சிறுமியர்களுக்கு ஆத்திசூடி கொன்றைவேந்தன், திருப்பாவை, திருவெம்பாவை போட்டிகளை சிறப்பாக நடத்திவரும் குழுவினை பாராட்டுகிறோம்.**

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்




## மதமாற்றம் இருக்கும்வரை தாய்மதத்திற்கு மாற்ற அநுமதி

சட்டம் இயற்றிவிடுவதால் மட்டுமே எந்தக் குற்றமும் நிகழாமல் தடுத்து நிறுத்திவிட முடிவதில்லை. எல்லா நாடுகளிலும் எல்லாக் குற்றங்களும் நடந்து கொண்டு தானிருக்கின்றன. அவ்வாறு சுய விருப்பமொன்றின் மீது மட்டுமேயில்லாத மதமாற்றக் குற்றங்களும் நடைபெறுமாயின், அவை நடைபெறும் வரையில் அவற்றுக்கு எதிர் நடவடிக்கையாகத் தாய் மதத்திற்கே மீண்டும் மதம் மாற்றுவதைக் குற்றமாகக் கருதாமல் அரசாங்கம் அநுமதிக்க வேண்டும்.

சுய விருப்பத்தின் மீது எந்த ஒரு பிரஜையும் எந்த ஒரு மதத்தையும் தழுவியிருக்கச் சுதந்திர உரிமையைச் சட்டபூர்வமாக ஓர் அரசாங்கம் அளிக்கும்போது கையோடு கையாக, அச்சுதந்திரத்திற்கு ஊறு பயப்பதான மத மாற்றத்தைச் சட்டப்பூர்வமாகத் தடுப்பதில் தனக்குள்ள பொறுப்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதாலேயே, இவ்விஷயம் அதற்குரிய முக்கியமான கவனத்தைப் பெறாமலிருந்துவிடக் கூடாதெனக் கருதி ஒரு மதத்தின் தலைமைப் பீடங்களில் ஒன்றில் இருப்பவரின் கடமையாக இவ்வளவு விரித்துக் கூறினோம்.

இதனால், எல்லா மதங்களுக்குமே சுதந்திர பாரத அரசாங்கம் ஒரு போன்ற ஆதரவளிக்க வேண்டும் என்ற கொள்கையை நாம் ஆட்சேபிப்பதாக அர்த்தமாகாது. உரிய முறையில் அவ்வாதரவு நல்கப்படுவதை வரவேற்கவும் வலியுறுத்தவுமே செய்கிறோம். அந்த "உரிய முறையையே நமது ஆலோசனைக்கு எட்டியபடி விளக்கினோம்.



# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்

*3.3 மொழியும், முன்பதிவே :*

*சென்றமாதத் தொடர்ச்சி...*

*இந்த பலதரப்பட்ட கலப்படமான கூட்டத்தில் எவராலும் இன்னொருவருடைய மொழியைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் 15 ஆண்டுகளுக்குப் பின்னர், 1880 - 1910 ஆண்டுகளுக்கிடையில், இவர்களின் குழந்தைகளாகிய முதல் சந்ததியினர், புதியதொரு மொழியை உண்டாக்கினர். அதன் பெயர் ஹவாயன் கிரியோல் என அமைந்தது. இம்மொழி, எல்லா மொழிகளிலிருந்தும் சொற்களைக் கடன் வாங்கியது. இருந்தாலும் உலகப்பொதுவான இலக்கண அமைப்பை உடைத்தாயிற்று. மொழித்திறன் நம்முள்ளேயே வைக்கப்பட்டிருக்கிறது" எனும் நோவாம் சோம்ஸ்க்கியின் கொள்கையை இது உறுதிப்படுத்துகிறது.*

*'வெவ்வேறு மொழிகள் எவ்வாறு பிறக்கின்றன?"*

*ஒரே எழுத்து, வெவ்வேறு விதமாக எழுதப்படுவதைப் போல, வெவ்வேறு மொழிகள் என்பவை ஒரே பொருளுக்கான வெவ்வேறான ஒலிக்குறிகள். ஒவ்வொரு நாட்டிலும் முதன் முதலில் பிறந்த மக்கள் தங்களின் முந்தைய பிறவிகளில் பதிவான ஸம்ஸ்காரங்களைப் பெறுகிறார்கள். ரூதச் சொற்களும் இலக்கண அமைப்பும் அவர்களின் ஸம்ஸ்காரங்களில் ஏற்கனவே பதிந்திருப்பவை. பின்னர், இந்த அடிப்படை மொழியும் விரிவடைகிறது. பல மொழியினர் ஒருவரோடொருவர் கலக்கும்போது, மொழிகளும் கலக்கின்றன. ஆனால் ஒவ்வொரு மொழியிலும், நான், நீ, அது, இப்பொழுது, அப்பொழுது முதலிய ரூதச் சொற்கள் ஆதியற்றவை; அந்தமுமற்றவை; நிரந்தரமானவை.*

*தொடரும்..*

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## எந்தக் கடவுளிடம் ஒருவன் பிரார்த்திக்க வேண்டும்?



சென்றமாத தொடர்ச்சி...

மிகுந்த ஆற்றல் கொண்ட தமது தந்தையான சிவனே அவனைக் காப்பாற்றட்டும் என்று எண்ணி வினாயகர் சும்மா இருந்துவிட்டார். அதே சமயம், சிவன், பக்தர்களின் இடையூறுகளைக் களைவதையே தமது வேலையாகக் கொண்டுள்ள வினாயகரின் காரியத்தில் நாம் தலையிடக் கூடாது என்று எண்ணி, அவரும் பிராம்மணனின் உதவிக்கு வராமல் இருந்துவிட்டார். கடைசியில், சந்தேகத்திற்கு இடமளித்த அந்த பிராமணன் நீரில் மூழ்கி இறந்தான்.

ஒரே கடவுள்தான் சிவன், விஷ்ணு, வினாயகர் போன்ற பல்வேறு வடிவங்களைப் பெற்றுக்கொள்கிறார் என்ற உண்மையை ஒருவன் புரிந்துகொள்ள வேண்டும். ஆகையால், தன்னைக் காப்பாற்றக்கூடிய ஆற்றல், ஒரு தெய்வத்தைக் காட்டிலும் மற்றொரு தெய்வத்தினிடம் குறைவாக உள்ளது என்று ஒருவன் கற்பனை செய்துகொள்ளக் கூடாது. இருந்தாலும், மனதைக் கவர்ந்த ஏதாவது ஒரு கடவுளை, தனது இஷ்ட தெய்வம் என்று சொல்லிக் கொள்வதற்கு ஒருவனுக்கு சுதந்திரம் உள்ளது. சிலருக்கு சிவனும், மற்றும் சிலருக்கு விஷ்ணுவும் இஷ்ட தெய்வமாக இருக்கலாம். எனவே, ‘சிவனைக்

காட்டிலும் விஷ்ணு வேறானவர்; சிவனிடத்தில் இருக்கும் சக்தி விஷ்ணுவிடத்தில் இல்லை” என்பது போன்ற எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் , “என்னுடைய உள்ளம் கவர்ந்த சிவனேதான், விஷ்ணு முதலிய தெய்வங்களாகவும் இருக்கிறார்” என்றே ஒருவன் நினைத்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட மனப்பான்மையோடு இருக்கும் ஒருவன், ஆகம விதிப்படி நன்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட எந்தக் கோயிலுக்குச் சென்றாலும், மன அமைதியோடு காணப்படுவான். “நான் விஷ்ணுவை வணங்கினால், சிவன் என்னிடத்தில் கோபித்துக்கொண்டு விடுவாரோ?” என்பது போன்ற எண்ணங்களால் அவன் பாதிக்கப்பட மாட்டான்.

முற்றும்.



99940 89133 99940 89140

**SRI SASTHA CATERING**


*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*


**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance Specialist

**மருத்துவ பாலிசி உங்களை**
**செல்வந்தராக்காது**
**ஆனால்**
**உங்கள் குடும்பத்தை**
**கடனாளியாக்காமல் பாதுகாக்கும்!!!**
**மருத்துவமனை வரவேற்பறையில்**
**சிறிது நேரம் அமர்ந்து பாருங்கள்**
**ஏன் மருத்துவ பாலிசி**
**எடுக்க வேண்டும் என்பதற்கு**
**பதில் கிடைக்கும்.**





**S. Narayanan - 9360277372**

# குழந்தைகள் பகுதி

*அன்பு குழந்தைகளே!!! நலமாக இருக்கிறீர்களா?*

*சென்றமாதம் நம் நாட்டின் தேசியக் கொடி, தேசிய பறவை மற்றும் தேசிய மரம் எவை என்று பார்த்தோம் அல்லவா?*

*இந்த மாதம் மற்ற சின்னங்களைப் பார்ப்போமா?*

**4. தேசிய நதி :** *நம் நாட்டில் உள்ள நதிகளிலேயே மிக நீளமாக உள்ள "கங்கை" நதிதான் நம்முடைய தேசிய நதி. 04.11.2008 அன்று இது தேசிய நதியாக அறிவிக்கப்பட்டது. இமயமலையில் உள்ள பகவதி நதி என்னும் கங்கோத்ரி பனிக்கட்டி பனிப்பகுதிகளில் உருவாகி 2,510 கி.மீ. பாய்ந்து கடைசியில் வங்காள விரிகுடாவில் கடலில் கலக்கிறது.*

*இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் 22.10.2010-ல் அறிவித்தது.*

**5. தேசிய விலங்கு :** *"பந்தேரா டைசிரஸ்" என்னும் அறிவியல் பெயரை உடைய பேராற்றல் கொண்ட "புலி' தேசிய விலங்காக 1973-ம் ஆண்டு இந்திய வனவுயிர் வாரியம் அறிவித்தது. அற்புதமான பெங்கால் புலி அடர்ந்த மஞ்சள் கோட்டை உடையது.*

**6. தேசிய அடையாள சின்னம் :** *இந்த சின்னம் உத்திரப்பிரதேசம் சாரநாத் அசோக சின்னத்திலிருந்து எடுக்கப்பட்டது. இதன் மூல வடிவத்தில் நான்கு சிங்கங்கள் எதிர் திசையைப் பார்த்தபடி நின்று கொண்டிருக்கும். அலங்கார வேலைப்பாடமைந்த ஓரப் பகுதியை உடைய ஒரு மணிசட்டத்தின் மேல் நிறுவப்பட்டிருக்கும். சுற்றி அமைந்த பட்டையில் ஒரு யானை, ஒரு ஓடும் குதிரை, ஒரு காளை, ஒரு சிங்கம் ஆகியவை செதுக்கப்பட்டிருக்கும். முண்டக உபநிஷத்திலிருந்து "வாய்மை மட்டுமே வெல்லும்' என்னும் பொருளுடைய "சத்தியமேவ ஜயதே' என்னும்*

*சொற்கள் மணிச் சட்டத்தின் கீழ் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டிருக்கும்.*
*26.01.1950 அன்று இது தேசிய அடையாளச் சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*
*மீதி சின்னங்களை அடுத்தமாதம் பார்போமா?*

*உங்கள் அன்புள்ள :* **“வேதபாரதி” தாத்தா**

**வேதபாரதி வேத வகுப்புகள் குழுவினர்**

*ஸ்ரீமான் கைலாச கனபாடிகள், குடந்தை*
*ஸ்ரீ கே.ராமகிருஷ்ணன், குடந்தை*
*ஸ்ரீ முரளிதரன், மதுரை*
*ஸ்ரீ சங்கர், சென்னை*
*ஸ்ரீ பரத், பாண்டிச்சேரி*
*ஸ்ரீ சீனிவாசன், பாண்டிச்சேரி*
*ஸ்ரீ வெங்கடகிருஷ்ணன், மதுரை*
*ஸ்ரீ ரவிச்சந்திரன், பாண்டிச்சேரி*
*ஸ்ரீ சுப்ரமணியம், திருச்சி*
*ஸ்ரீ பி.ஆர். சுப்ரமணியம், சென்னை*
*ஸ்ரீ கணபதி சுப்ரமணியம், சென்னை*
*ஸ்ரீ சிவராமன், பெங்களூரு*
*ஸ்ரீ ஆடிட்டர் ராம்குமார், சென்னை*
*ஸ்ரீ பிரபாகரன், சென்னை*
*ஸ்ரீ சதிஷ், துபாய்*
*ஸ்ரீ பாலாஜி, ஹைதராபாத்*
*ஸ்ரீ சூர்யநாராயண ப்ரசாத், சென்னை*
*ஸ்ரீ மகாலிங்கம், பெங்களூரு*
*ஸ்ரீ குருமூர்த்தி, பெங்களூரு*
*ஸ்ரீ ஹரிஷ், கோவை*
*ஸ்ரீ ஹரிச்சரண், கோவை*
*ஸ்ரீ சங்கரநாராயணன், ஊரப்பாக்கம்*

**தொடர்ந்து 2 ஆண்டுகளாக 11 வேதவகுப்புகள் நடத்தி மிகப்பெரும் சாதனைபடைத்துள்ள குழுவினை பாராட்டுகிறோம்.**

# வேதபாரதி செய்திகள் புத்தகக்குழு

*கடந்த 8 ஆண்டுகளாக தொடர்ந்து புத்தகம் வெளிவர உதவி வருகின்ற நல்உள்ளங்களை வேதபாரதி மனதார பாராட்டுகிறது.*

**புத்தகக்குழு உறுப்பினர்கள் :**

*வேதபாரதியின் மூத்த நிர்வாகி ஸ்ரீ சூரியநாராயணன்*
*ஆர். வெங்கட்ராமன், ஆசிரியர்,*
*ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி, நங்கநல்லூர்*
*ஸ்ரீ சுப்ரமணியம், நங்கநல்லூர்*
*ஸ்ரீ ஸ்ரீராம், நங்கநல்லூர்*
*ஸ்ரீ ராமன், வேளச்சேரி*
*ஸ்ரீ டி. ராமன், திருப்பூர்*
*ஸ்ரீமதி சாந்தா நாகராஜன், வேளச்சேரி*
*ஸ்ரீ பத்மநாபன், வேளச்சேரி*
*ஸ்ரீ வைத்யநாதன், வேளச்சேரி*
*ஸ்ரீ சுவாமிநாதன், நன்மங்களம்*
*ஸ்ரீ சங்கர், நங்கநல்லூர்*
*ஸ்ரீமதி அன்னபூரணி, வேளச்சேரி*
*ஸ்ரீமதி ராஜி ராமன், வேளச்சேரி*
*ஸ்ரீ ஸ்ரீகாந்த், வேளச்சேரி*
*ஸ்ரீ ரகுநாதன், வேளச்சேரி*
*ஸ்ரீமதி காமாக்ஷி, வேளச்சேரி*
*ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி, ஊரப்பாக்கம்*
*ஸ்ரீ சந்திரசேகர், ஊரப்பாக்கம்*
*ஸ்ரீ நடராஜன், பாண்டிச்சேரி*
*ஸ்ரீ ரங்கராஜன், நங்கநல்லூர்*
*ஸ்ரீ நடராஜன், ஐஐடி வேளச்சேரி*
*ஸ்ரீ கிருஷ்ணன், வேளச்சேரி*
*ஸ்ரீ விஸ்வநாதன், வேளச்சேரி*
*ஸ்ரீ விஸ்வநாதன், நங்கநல்லூர்*
*ஸ்ரீ மணிசங்கர், தி.நகர்*

*வேதபாரதி செய்திகள் வளர்ந்த விதம் குறித்த கட்டுரை ஸ்ரீ சூரியநாராயணன் மாமா அவர்களால் 2021 அக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது.*


Find your partner
Best of luck
Brahmin Kalyanam.com
BK MATRIMONY.com
An Auspicious Begining...
(Exclusive Portal for Brahmins)
பிராமணர்களுக்கு மட்டும்
REGISTER & GET
Brides/Grooms Profiles +
Free Horoscope Matching +
TWO YEARS Validity
One time Membership Fees ₹ 1000 only.
Astro Guidance By:
Thethiyur V J Raman
Aathmartha Jothidar
89397 02500
brahminkalyanam.com@gmail.com

# நூல் மதிப்புரை
## (RVBS மணியன்)

*சென்ற மாத தொடர்ச்சி*
*(இந்துதர்மம் சந்தேகம் தெளிவோம்.)*

*பாவம் / புண்ணியத்திற்கு விளக்கம் அருமையாக உள்ளது. நேர்மறையான சிந்தனை மிகவும் அவசியம் என்கிறார். நம்பிக்கை தான் வாழ்க்கை. அதனால் மனிதன் தன்னம்பிக்கையுடன் வாழவேண்டும் என்கிறார். ரத்ததானம், கண் தானத்தின் அவசியம் பற்றி வலியுறுத்துகிறார்.*

*நமது பல பிரச்சனைகளுக்குக் காரணம் ஆன்மீக ரீதியான வாழ்க்கை முறையைக் கைவிட்டது தான் என்ற ஆணித்தரமாகக் கூறுகிறது இந்தநூல். இறைவன் வழிபாட்டில் மொழி ஒரு பிரச்சனை இல்லை. ஆனால் கோயில் மரபுகளை மாற்றும் அதிகாரம் எந்த அரசுக்கும் இல்லை என்று கூறுகின்றது.*

*இறைவழிபாடு மிகவும் எளியது. சிரத்தா பக்தியுடன் நாம் எதுசெய்தாலும் இறைவன் ஏற்றுக் கொள்கிறார் என்று கூறுகிறார்.*

*மனிதன் சொந்த வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, ஆன்மீகம், தேசம், வழிபாட்டு முறைகள் அனைத்திலும் நமக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விடைகிடைக்கின்றது இந்நூல். வாங்கிப்படிக்க வேண்டிய புத்தகம்.*

**3. தாயும், தந்தையும் கண்கண்ட தெய்வங்கள் என்ற கையடக்க வெளியீடு :**

*பாரதத்தின் லட்சியப் பெண்மணி தாய். ஆனால் தாய்மைப்பேறு கிடைத்திருப்பது பெண்கள் செய்த*

பாக்கியம். நமது நாட்டுக் குடும்பங்களில் பெற்றோர்கள் மிகவும் போற்றப்படுகிறார்கள். ஆனால் நம்மை வளர்த்து ஆளாக்கிய அந்த தெய்வங்களை வாழ்நாட்கள் முழுவதும் போற்றிப் பாதுகாப்பது நமது கடமை.

**கயா :** மாத்ருஷோடஸி என்பதில் வரும் பாடல்களையும் அதன் பொருளையும் 16 பாடல்களில் விளங்கியிருக்கிறார். அதை எல்லோரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் அதைப்படித்த பிறகும் தாய் தந்தையரை முதியோர் இல்லத்தில் சேர்ப்பது கொடுரமான செயல். பாவம் கயாவில் ஆண், பெண் இருவருக்கும் சிரார்த்த காரியங்கள் செய்ய முடியும். ஆனால் தாய்க்கு மட்டும், பெண்களுக்கு மட்டும் சிரார்த்த கர்மா – குஜராத்தில் உள்ள ஸித்பூர் (மாத்ரு கயா) என்ற இடத்தில் செய்ய முடியும் என்பது பெருமிதமான விஷயம்.

## வேத வகுப்புகள்

தினமும் மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையில் வாரத்தில் 5 நாட்களும் வார இறுதி நாட்களில் 2 நாட்களும் கடந்த 2 ஆண்டு காலமாக வேத வகுப்புகள் நடந்துவருகிறது.

பிரதி பௌர்ணமி சிறப்பு ப்ரார்த்தனையாக வேதபாராயணம் நடந்துவருகிறது.

ஸந்த்யா வந்தன வகுப்புகள் நடந்து வருகிறது.

தொடர்ந்து ஆதரவு நல்கிவரும் தன்னலமற்ற குழுவினரை மனதார பாராட்டுகிறோம்.

ஆசிரியர்.

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 16

**"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு'**

**(அதிகாரம் 64, குறள் 632)**

"தைரியம், குடிபிறப்பின் மானம், அரசியல், கல்வியறிவு, விடாமுயற்சி இவற்றோடு இணைந்து பஞ்சதந்திரங்களின் அறிவும் சேர்ந்து அளிக்கும் அறிவுச்சார்ந்த பெருமைகளே சிறந்த மந்திரிகளின் தகுதிகள்" என்று பொருட்பால் – அமைச்சுப் பகுதியில் வள்ளுவர் ஒரு மந்திரிக்கான அறிவுசார்ந்த தேவைகளைப் பற்றி கூறுகிறார்.

மேற்கூறியது மந்திரிகளுக்கானது மட்டுமல்ல, ஒவ்வொரு ஆசிரியருக்கும், அதைவிட அதிகமாக பெற்றோர்களுக்கும் பொருந்தும். அதிலும் குறிப்பாக "தாய்'' எனும் மிகப்பெரிய பதவி பெற்றபெண்மணிகளுக்கு சாலப் பொருந்தும்.

இன்று ஆசிரியப் பெருமக்களுக்கு, மாற்றத்திற்கான தேவையானப் படிப்பை அரசு, தனியார் பள்ளிகள் தொடர்ந்து கற்றுக் கொடுத்து கொண்டே உள்ளது. படிக்க கைபேசியில்லை எனும் மாணவ மணியிலிருந்து துவங்கி படித்து என்ன பிரயோசனம் என்று அலுத்துப் போனவர்கள், பெற்றோர்களை இழந்து முழுமையாக தனிமையின் கோரப்பிடியில் சிக்கிவிட்ட கொரோனா காலகட்ட

மாணவர்கள், என்ன செய்வது என்று புரியாமல் தீயசக்திகளின் பிடியில் மாட்டிக் கொண்ட மாணவர்கள் என்று பல்வேறு மாணவர்களை சமாளித்து "ஆன்லைன்" வகுப்பு எடுப்பது என்பது சுலபமா? யோசியுங்கள்.

உங்கள் வீட்டில் எந்தவித அசம்பாவிதமும் நடக்கவில்லை என்பதால் "இதெல்லாம் சகஜமப்பா" என்று ஒருவித அலட்சிய மனப்பான்மையுடன் இருப்பது என்பது பெற்றோர்களாகிய உங்களுக்கு சரி என்று தோன்றுகிறதா?

இந்த உணர்வை உங்கள் மகனோ அல்லது மகளோ உங்கள் குடும்பத்தில் ஓர் அசந்தர்ப்பம் நடந்தால் அப்படியே பிரதிபலிப்பார்கள் என்று யூகித்து செயல்படுங்கள்.

நான் அடிக்கடி கூறுவது போன்று குழந்தைகளிடம் 'empathy' எனும் உணர்வை அளியுங்கள் 'sympathy' அறவே வேண்டாம்.

'Empathy' என்பது - நீ என்ன உணர்ந்து கொண்டிருக்கிறாய் என்பதை உணர்ந்து, புரிந்து கொண்டேன்' என்று மற்றொரு முறை நினைவுபடுத்துகிறேன்.

இந்த புரிதல் மூலம் நீங்கள் குழந்தைகளுக்கு அளிக்கும் மன அழுத்தம் குறையும் என் குழந்தையால் என்ன செய்ய முடியும், எந்த அளவு உழைக்க முடியும் என்று உணர்ந்து செயல்படுவது ஒரு தாயின் மிக முக்கியமான கடமையாகும்.

அடிப்படை கணக்குப் பாடத்தில் திணறும் குழந்தையை "இன்ஜினீயர்" (பொறியாளர்) ஆக

வேண்டும் என்று வற்புறுத்த மாட்டீர்கள். “இலக்கு” எதுவோ அதை மட்டும் பார்த்துக் கொண்டே நீந்திக் கொண்டிரு அலைகள் தானாகவே கரையில் உன்னைக் கொண்டு போய் சேர்க்கும் என்று ஒரு மந்திரியின் நுட்பத்துடன் பேசும் கடமை தாய்க்கு உள்ளது.

படிப்பிற்கு உழைப்பு தேவையான அளவு, ஓய்வும் தேவை, உணவும் தேவை, படிக்கும் மாணவனின் மூளைப் பகுதி மிகுதியாக பிராண வாயுவை (Oxygen) எடுத்துக் கொள்கிறது. இங்கு ஒரு தாய் 'Dietician' ஆக மாறவேண்டும்.

உழைக்கும் ஒவ்வொருவருக்கும் ஊக்கம் நிறைந்த வார்த்தைகள் எந்த வயதிலும் தேவை. குறிப்பாக உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் தான் “ஊக்க மாஸ்டர்”.


“எனக்காக மார்க், நம் குடும்பத்திற்காக உன்னால் அவமானம், அவனைப் பார், உன் பெரியப்பா மகன் எப்படி படிக்கிறான்” இது போன்றவற்றைமுற்றிலும் தவிர்த்து “நீ நீயாக இரு, படி உன்னிடம் தவறு இருந்தால் நானே சுட்டிக் காட்டுகிறேன். மதிப்பெண்களினால் அழுகை, கோபம், பொறாமை, வெறுப்பு, மகிழ்ச்சி, பெருமை இந்த குணங்களை உனக்குள் புகுந்து கொள்ளாமல் இருக்க நாம் இருவரும் இணைந்து செயல்படுவோம்’’ என்று தாய் கூறவேண்டும்.

அப்பொழுது தந்தைக்கு எந்தப் பொறுப்பும் இல்லையா? என்று தாய்மார்கள் என்னிடம் சண்டைக்கு வர, ஒரு மாதம் காத்திருங்கள்.

தொடரும்......

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

எண்.31, சேஷாத்ரிபுரம் முதல் பிரதான சாலை, பேபிநகர், வேளச்சேரி, சென்னை - 42.
செல் : 9443495950 / 9940043551

## ஸ்லோக வகுப்புகள் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா
## ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம் 2022 துவக்க விழா

அன்புடையீர் வணக்கம்! வாழ்க வளமுடன்

பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆசிகளுடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக வேதபாரதி குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் மதுரை ஸ்ரீ முரளிதரன், ஸ்ரீமதி நீலா முரளிதரன் தம்பதியினரால் ஸ்லோக வகுப்புகள், ஸமஸ்க்ருத வகுப்புகள் தொடர்ந்து நடந்து வருகிறது. நெரூர் பூஜ்ய ஸ்ரீ வித்யா ஸங்கர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஆக்ஞையின் படி ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம் துவக்கவிழாவும், குழந்தைகளுக்கான ஸ்லோக வகுப்புகள் 2-ம் ஆண்டு நிறைவு விழாவும் ஏப்ரல் மாதம் 24-ம் நாள் நடைபெற உள்ளது. அவசியம் அனைவரும் பங்குபெற அன்புடன் அழைக்கிறோம்.

**நாள் : 24.04.2022, ஞாயிற்றுக்கிழமை**
**காலை : 9.30 மணி**

**இடம் : APL குளோபல் பள்ளி வளாகம், துரைப்பாக்கம், ECR ரோடு, சென்னை.**

### வேதகோஷம் துவக்க கீதம்

| | | |
|---|---|---|
| **ஸ்வாகதம்** | : | ஆடிட்டர் ராமநாதன், திருப்பூர் |
| **திட்ட அறிக்கை** | : | 2022 - 2023 வாசித்தல் |
| **ஆசியுரை** | : | **பூஜ்யஸ்ரீ வித்யா ஸங்கர சரஸ்வதி ஸ்வாமிகள்,** நெரூர் |
| **மகிழ்ச்சியுரை** | : | பூர்த்தி கீதம் |

**மேலும் தொடர்புக்கு**

| ஸ்ரீ ராமகிருஷ்ணன் | ஸ்ரீ சங்கர் | ஸ்ரீ முரளிதரன் |
|---|---|---|
| 9994926537 | 9445102193 | 94884 22768 |

# பாவையில் வாழ்வியல்

திருப்பாவை பாடல்களில் ஒரு வாழ்விற்குரிய ஒழுங்கான, ஒழுக்கமான நெறிகளை கூறுகிறார்கள் ஆண்டாள்.

திருப்பாவையின் உட்பொருள் இறைவனிடம் கைங்கர்ய பிரார்த்தனை செய்வதுதான். இயல்பான குணநலன்களுடன், பக்தியில் திளைத்து வாழ்வியலை அமைத்து கொள்ளுமாறு கூறுவது ஆண்டாளின் தனித்தன்மை.

திருப்பாவை பெண்களின் உணர்வு நிலையை சிதறவிடாது பக்தி செலுத்த கூறுகிறது.

உதாரணமாக, "மற்றை நங் காமங்கள்" என வரையறை செய்கிறாள்.

காம வயப்பட்டவர்கள், பல மாறுபட்ட செயல்களை செய்யக் கூடும். அன்பு என்பது காமத்திலிருந்து மாறுபடுகிறது. அன்பு அனைவரையும் ஒன்று சேர்க்கிறது. காமம் சுயநலமானது.

அவ்வாறு அன்புடன் அனைவரையும் முக்கியமாக இளந்தலைமுறைப் பெண்களை. பாவைகளை நெறிபடுத்துகிறாள், ஆண்டாள் எவ்வாறு கூடி வழிபட கூறுகிறாள்?.

விடியலில் எழுந்து, நீராடி என்று அடுக்கிக் கொண்டே போகிறாள்.

வழிபாட்டில் தூய்மை பேணப்பட வேண்டும் என்று உறுதிபட கூறுகிறாள். தூய்மை என்பதை அகத்தூய்மை, புறத்தூய்மை என்று மிக அழகாக தெளிவு படுத்துகிறாள்.

திருப்பாவையின் ஒவ்வொரு வார்த்தையும் எடுத்துக் கொண்டோமானால் விரிந்து பரந்த வகையில் வாழ்வியலை எடுத்துக் காட்டும் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை.

*உதாரணமாக, ‘தீக்குறளைச் சென்றோதோம்” என்று எத்தனை அழகாக கூறுகிறாள்.*

*செய்யாதன செய்யோம்;*

*தீக்குறளை சென்றோதோம்...*

*சென்று ஓதோம்... இ;க்றைய கால கட்டத்திற்கு எவ்வளவு அழகாக பொருந்தி நிற்கிறது. சற்றே கவனியுங்கள்.*

*பேசக் கூடாத வார்த்தைகளை, தகுதி அற்ற நபர்களிடம், பேசக்கூடாது என்று அழகாக கூறுகிறாள்.*

*வீடு வீடாக சென்று தெரியாத விஷயங்களை, தெரிந்தது போல கற்பனை கலந்து பொய் என்ற நஞ்சு கூட்டி, வம்பு பேச வேண்டாமே என்று கூறுகிறாளே...*

*எப்படிப்பட்ட அறிவுரை... விவரித்துக் கொண்டே செல்லலாம். பக்தியின் உணர்வு நிலை சிதறாமல் இருக்க, உணர்வை கட்டுப்படுத்த உள்ளம் தேவை என்று விவரிக்கும் ஆண்டாள் பாசுரங்களின் ஒவ்வொரு வார்த்தையுமே வாழ்வியலை துல்லியமாக தெறிக்கவிடுகின்றன.*

**திருமதி. சந்தியா.**

## நன்றி

*2021 - 2022 மார்கழி மாத சிறப்பு கட்டுரைகள், பாவையில் வாழ்வியல் என்ற தலைப்பில் ஸ்ரீமதி மீனலோசனி கணேசன், திருச்சி அவர்களும், ஸ்ரீமதி காந்தாமணி, ஸ்ரீமதி சந்தியா, திருப்பூர் அவர்களின் கட்டுரையும் தேர்வு செய்யப்பட்டு கடந்த 4 மாதங்களாக பதிவு செய்யப்பட்டது. கட்டுரைகள் வழங்கிய நல்உள்ளங்களை வாழ்த்துகிறோம். தங்கள் எழுத்துப்பணி தொடர இறைவனை வேண்டுகிறோம்.*

*ஆசிரியர்.*


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
WOPPER



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்



2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"

There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!**


புற்றுநோய் - மூன்று நாட்கள் மருந்து எடுத்துக் கொண்டால் சரியாகிவிடும் காய்ச்சல், சளி போன்றது அல்ல; அது மிக நீண்ட தூர, வலியும் - வேதனையும் நிறைந்த பயணம். நோய் குணமாகும் காலத்தை உறுதியாக கணிக்க முடியாத இந்த வலி நிறைந்த பயணத்தை பணம் படைத்தோர் எளிதாக கடந்து விடுகிறார்கள். ஆனால், ஏழைகளுக்கோ இந்த பயணம், உணவு - தங்குமிடம் - மருந்து, மாத்திரை செலவு - ஆய்வக கட்டணங்கள் என எண்ணற்ற, தங்களால் சமாளிக்க முடியாத தடைகளைக் கொண்டதாக இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் மேற்கூறிய வற்றை **முற்றிலும் இலவசமாக** தந்து, அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு வரும் ஏழை புற்றுநோயாளிகள் தொடர் சிகிச்சை பெற தேவையான சாத்தியக்கூறுகளை உருவாக்கி அவர் களது உயிர் காக்கும் உன்னத சேவையை செய்து வருகிறது நம்ம தர்மசாலா. ஏழை புற்றுநோயாளிகளின் உயிர்காத்திடும் இந்த இறை பணிக்கு நிகரான திருப்பணிக்கு நிதியுதவி அளித்து, உண்மையான இன்பத்தை உணர்ந்திடுங்கள். காலத்தால் அழியாத செல்வமான பெரும் புண்ணியத்தை உங்களுக்கும் உங்கள் சந்ததியினருக்கும் சேர்த்திடுங்கள்...

ஏழை புற்றுநோயாளிகளின் பசி தீர்க்க தொடர்ந்து ஸ்ரீ மாதா டிரஸ்டிற்கு நன்கொடை வழங்கி வரும் **திரு G.R.ரவி (Managing Director, Teems India Towerlines Pvt. Ltd.)** அவர்கள், தனது நிறுவனம் சார்பாக CSR நிதி **3,50,000/-** ரூபாயை நமது நிர்வாகி திரு அமெரிக்கன் அவர்களிடம், தனது ஊழியர்கள் முன்னிலையில் நன்கொடையாக வழங்கி மகிழ்ந்தார். அவர் தனது ஊழியர்களிடம், அவர்களது இல்ல விசேஷ தினங்களில் ஏழை புற்று நோயாளிகளுக்கு உணவு வழங்கிட, இயன்ற நிதி உதவியை வழங்கிடுமாறு கனிவுடன் கூறினார். திரு ரவி அவர்களும், அவர்களது குடும்பத்தினரும், அவரது நிறுவனமும் வளம் பெற இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.




செங்கல்பட்டுக்கு அடுத்த மாமண்டூர் கிராமத்தில் நாம் நிர்மாணிக்க உள்ள **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்லம்** இயற்கைச் சூழலில் அமைய உள்ளது. இதன் கட்டுமானப் பணிகளுக்கு சுமார் **ஆறு கோடி ரூபாய்** செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, இதுவரை இரண்டு கோடி ரூபாய் நன்கொடையாக நம்மிடம் வந்துள்ளது. தற்போது முதற்கட்ட கட்டிட வேலைகள் ஆரம்பித்துவிட்டது. வேலைகள் முடிந்து 2023 சித்திரையில் நமது இலவச முதியோர் இல்லம் ஏழை முதியவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு

**முதியோர் தங்கும் அறை வரைபடம்**



வரவேண்டும் என்கிற எங்களது நல்ல எண்ணம் நிறைவேற உங்களின் தாராள நிதியுதவியை வேண்டுகிறோம். **இம் முதியோர் இல்ல கட்டிட நிதியாக ரூ.5,00,000/- வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில், இம்முதியோர் இல்லத்தில் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும்.** தாங்கள் விரும்பிய தொகையை நன்கொடையாக வழங்குவோர் பெயரும் நமது முதியோர் இல்லத்தில் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும். **சிந்திப்பீர்... செயலாற்றுவீர்...**

**ஸ்ரீ ஜயேந்திர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல வரைபடம்**



**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "**நம்ம தர்மசாலா**"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "**PAN**" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**

**vkrishnamoorthy.smt@gmail.com** **www.srimathatrust.org**

# சாதனைப் பறவைகள்

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**

## செங்கோட்டை ஆவுடையக்கா - 2-ம் பகுதி தொடர்ச்சி

ஆவுடையக்காவின் பாடல்களின் தலைப்பே அவருக்குள் இருக்கும் வேதாந்த அக்னியை வெளிப்படுத்துவதாக உள்ளது. எங்குமாக ஏன் அலைகிறாய் மனமே, 'போதம் தெளிவேனோடிகிளியே', 'வேதாந்த அம்மானை, 'வேதாந்த பள்ளி', வேதாந்த கப்பல், அத்வைதமெய்ஞான ஆண்டி, வேதாந்த ஆச்சேபோச்சே, மனம் புத்தி ஸம்வாதம் – அன்னே பின்னே என்னும் வேதாந்த சாராபிரத்தியோத்திரக் கும்மி, சூடாலைக் கும்மி, வேதாந்த கும்மி, கோலாட்டப் பாட்டு, வேதாந்த ஞானரஸ கப்பல், வேதாந்தக் கப்பல், கண்ணிகள் வகைகளில் கிளிக் கண்ணி குயில் கண்ணி, பராபரக் கண்ணி; ஸ்ரீதட்சிணாமூர்த்தி படனம், அத்வைத ஏலேலோ, வேதாந்தநொண்டிச் சிந்து, ஞானக் குறவஞ்சி நாடகம், வாலாம்பிகை பந்து, ஸ்ரீவித்தை சோபனம், அனுபோக ரத்னமாலை வேதாந்த வண்டு, அத்வைத தாலாட்டு, தொட்டில் பாட்டு, ஊஞ்சல் என ஆவுடை அக்காளின் பாடல்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

ஒரு நாள் துலாகாவேரி ஸ்நானத்திற்காக ஆவுடையக்கா மாயவரத்திற்கு வந்தார். ஞானஸ்வரூபியாக இருந்தார். அவரின் செயல்கள் சிலரின் கேலிக்குள்ளாகியது. ஆவுடையக்கா புன்னகையுடன் படியேறி அங்கே அரசமரத்தடியில் வீற்றிருந்த தன் குருவின் பாதங்களைப் பணிந்தார். பீஜாக்ஷரமந்திரத்தை அய்யாவாள் உபதேசித்து

*(தர்பையினால் அக்காவின் நாக்கில் எழுதினார் என்று சில கட்டுரைகள் சொல்கின்றன)*

*"உனக்கு ஜீவன் முக்தி நிலை ஏற்பட்டு விட்டது. நீ எங்கிருந்தாலும் இனி உன்னை கர்ம பந்தம் அணுகாது. உன் சொந்த ஊருக்கே சென்றிரு" என்று உபதேசித்தார் என அறிய முடிகிறது. குருவின் ஆக்ஞைப்படி ஆவுடையக்காள் ஊர் திரும்பினார். என்ன ஆச்சர்யம் ! காலப் போக்கில் மக்களின் மனநிலை மாறி அக்காவைப் பேரன்புடனும் பெருமதிப்புடனும், பக்தி சிரத்தையுடனும் வரவேற்றார்கள். பலகாலம் அக்கா தன் சொந்த ஊரில் இருந்து பல தெய்வீகப் பாடல்களை உருவாக்கி, பலரையும் ஞான நிலைக்கு உயர்த்தினார். !*

*ஆண்டவனால் நிர்ணயிக்கப்பட்ட அவருடைய பிறவிப் பயன் பூர்த்தியடையும் காலம் வந்துவிட்டதோ என்னமோ, ஓர் ஆடி அமாவாசை நன்னாள். திருக்குற்றால அருவியில் ஸ்நானம் செய்துவிட்டு, மலையின் மீதேறிச் சிறிது தொலைவு சென்று தியானம் செய்யப் போவதாய் சிஷ்யைகளிடம் கூறிச்சென்றார் ஆவுடையக்காள். சென்றவர் சென்றவர்தாம். எங்குத் தேடியும் ஆவுடையக்காள் அதன் பின்னர் தென்படவில்லை.*

*• பகவான் ரமணமகரிஷியின் முன்னிலையில் ஆவுடையக்காள் எழுதிய பாடல்கள் சிலவற்றைப் பாடுவது இன்றும் வழக்கமாக இருந்திருக்கிறது என்று சொல்கிறார்கள்.*

*• "ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார் அவர்களுக்கு ஸ்ரீ அக்காள் அவர்களின் பாடல்கள் என்றால் உயிர்மட்டுமல்ல உத்வேகமும்தந்தவை என்றும் அறிய முடிகிறது.*

*குடத்திலிட்ட விளக்குபோல் இருந்து, ஆன்மீகத்தின் கோபுர எல்லைகளைத் தொட்டவர்*

என்பதை நாம் எப்போதும் மறந்துவிடக் கூடாது. 'உள்ளம் உருகுதைய்யா'வை நம்மால் மறக்க முடியுமா? அதை நமக்குத் தந்த ஆவுடையக்காவைப் போற்றுவோம். முற்றும்.

## வேதபாரதி செய்திகள் கட்டுரையாளர்கள்

ஸ்ரீ சூரியநாராயணன்
அறிவோம் வேதம் க்ருஷ்ண ஜகந்னாதன் ஜி
ஸ்ரீமதி டாக்டர் ஷ்யாமா சுவாமிநாதன்
ஸ்ரீமதி காந்தலட்சுமி சந்ரமௌலி
செஞ்சொல்லரசு ஸ்ரீ சீனிவாசன்
ஸ்ரீ ஆதிரையன்
ஸ்ரீமதி சிவசங்கரி

வேதபாரதியில் தொடர்ந்து கட்டுரைகளை வழங்கி வாசகர்களை ஊக்குவிக்கும் எழுத்தாளர்களை வேதபாரதி மனமார பாராட்டுகிறது. எல்லா நலமும் வளமும் பெற்று வாழ ப்ரார்த்திக்கிறோம்.

### நன்றியும், பாராட்டுக்களும்

தொடர்ந்து நல்லாதரவு அளித்துவரும் விளம்பர தாரர்கள் ஸ்ரீ மாதா ட்ரஸ்ட் க்ருஷ்ணமூர்த்தி மாமா, ஸ்ரீ மஹாமேரு மண்டலி குருஜி, ஸ்ரீ முனீஸ்வர ஸாஸ்திரிகள், அநாதப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட் ஸ்ரீ ஸ்ரீதர், சிட்டி யூனியன் வங்கி கும்பகோணம், சூர்யா ஜுவல்லர்ஸ் திருப்பூர், தேதியூர் ஸ்ரீ V.J.ராமன், ஜோதிடர், அரோ மீரா, லூப்பர் லேப் ஆகியோர்களுக்கு மனதார நன்றியினை வேதபாரதி தெரிவித்துக்கொள்கிறது.

சிறந்த முறையில் வடிவமைத்து கொடுக்கும் ரெம்ஸ் நிறுவனத்திற்கும், புத்தகம் தயாரித்து கொடுக்கும் அச்சகத்தார் ஸ்ரீ சபாநாயகம் பிரிண்டர்ஸ் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

# உறவுகள் தொடர்கதை

*சென்றமாத தொடர்ச்சி....*

*“அப்பா பேரு மௌலி தாத்தா, இந்த சிவனோட பேருனு தாத்தா சொல்லுவார். பாட்டி நான் குழந்தையா இருக்கும் போதே தவறிட்டா, தாத்தா எங்ககூட இருந்தா, இப்போ ஒரு மாசம் ஆச்சு, தாத்தா தவறிப்போய்.*

*‘‘பகவானே எத்தனை வருஷம் இருக்கும் அவனைப்பார்த்து, நாற்பது வருஷத்துக்கு மேல இருக்கும். இந்த ஊரை விட்டு போய், ஒரு தடவை கூட எட்டிப் பார்க்கலையே கடக்காம கொள்ளாம போய்ச் சேர்ந்தானா! உன்னைப் பார்த்தது சந்தோஷம்மா!!... உன் தாத்தா என்ன பண்ணுவான் தெரியுமா. அவனைப் போல விஷமம் யாரும் கிடையாது. அப்போலாம் நாங்க இந்தக் கோவிலே கதினு இருப்போம் அதைச் சுத்தி தான் எல்லா வேலையுமே. நன்னா உச்ச ஸ்தாயில பாடுவான் தெரியுமோ? அவன் உயரத்துக்கும், கலருக்கும் என்.டி.ஆர். மாதிரி இருக்கானு சொல்வா, இந்த ஜனங்க அப்போ, ஆமா என்ன விஷயமா வந்திருக்க’’.*

*“எனக்கு இரண்டு வேலை தாத்தா, கோவில்ல ஒரு முருகன் சன்னதி இருக்காமே அங்க போகணும். தாத்தாவோட வீடு மேலை தெருவுல இன்னும் இருக்கா? அதையும் பார்க்கணும்.’’*

*’’சித்த இங்க இரு, கை கால அலம்பிண்டு எதான சாப்பிடு நான் பையனை கூட்டிண்டு போக சொல்றேன்’’*

**இரண்டு மாதங்களுக்கு முன்பு :**

*“அம்மா, தாத்தாக்கு இப்போ எப்படி இருக்கு? என்று சிங்கப்பூரிலிருந்து ஃபோனில் கேட்டாள் அபர்ணா.*

*“சரியா சாப்பாடு இல்லை. கொஞ்சம் வீக்கா*

*இருக்கார். வயசு ஆறதுல்ல, உன்னை விட்டா அவர்கூட பேச ஆளில்லை. என்ன பண்வார்? வேண்டா வெறுப்போட எனக்கு சைகல காட்டுவார். உங்க அப்பாகிட்ட அதுவும் கிடையாது, இவங்க இரண்டு பேரும் எப்ப பேசியருக்காங்க, இப்போ முடியாதப்போ பேசறதுக்கு?"*

*"சரிமா, தாத்தான்னு எதுவும் சொல்லாதே, எனக்கு இயர்எண்ட் தானே, நான் அடுத்த வாரம் வரேன். ஒரு மாசம் சென்னைல இருந்து* Work from Home *கேட்டிருக்கேன்.*

*"அப்பா ரொம்ப நல்லது, சீக்கிரம் டிக்கெட் புக் பண்ணிட்டு சொல்லு எங்களுக்கும் போர் அடிக்கறது".*

*அப்பாவுக்கும், தாத்தாவுக்குமான உறவு அபர்ணாவிற்கு புரிந்ததில்லை. அவர்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் பேசிப்பார்த்ததில்லை. அதற்கான காரணத்தையும் கேட்டதில்லை.*

*என்னதான் தாத்தாவிற்கு எத்தகைய குறையும் அப்பா வைக்காவிட்டாலும் சுத்தமாகப் பேசிக்கொள்ளாமல் இருப்பது எனக்கு அறவே பிடிக்காது.*

*ஒருவாரம் கழித்து சென்னைக்கு வந்தாயிற்று.*

*என் வாசனையை தூரத்திலிருந்தே நுகர்ந்தது போல, தாத்தா "அபர்ணா கண்ணா" என உள்ள நுழையும் போதே இரைந்து கூப்பிட்டார்.*

*"அபர்ணாவை பார்த்ததும், எழுந்து உக்காந்துண்டார் பாருங்களேன்" என்றாள் அம்மா.*

*அது ஒரு அலாதியான பந்தம். வேறு யாரிடமும் உணர முடியாத, எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாத பவித்ரமான ஒரு அன்பு. நான் நின்றால், நடந்தால், சின்ன துறும்பை அசைத்தால் கூட சந்தோஷப்படுவார்.*

*தொடரும்...*

**வெ.சிவசங்கரி**

# பெரிய அன்பின் வரகுண பாண்டியன்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

*சென்றமாத தொடர்ச்சி....*

*5. பிரகாரத்தில் கிடந்த மண்டை யோட்டைக்கண்டு மகாலிங்கம் பிரிய மனமின்றி இப்படிக் கிடக்கும் மண்டை ஓட்டின் நிலைதனக்கும் வாய்க்க வேண்டுமென வேண்டியவர்.*

*6. பிரகாரத்தின் ஓரிடத்தில் நாய் மலம் கிடந்ததைக் கண்டு தாமே அப்புறப்படுத்தித் தூய்மை செய்தார்.*

*7. வேப்பம் பழங்கள் எல்லாம் சிவலிங்கங்கள் போலக் காட்சியளித்தமையால் வேப்பமரங்களுக்கு விதானம் கட்டினார்.*

*8. தன்னை விரும்பிய சோழனின் மகள் மிக அழகியாய் இருந்தமை கண்டு, அவள் மருதூர் பெருமானுக்கே உரியவள் என அப்பிரானிடமே ஒப்படைத்தார்.*

*எனவே பட்டினத்தடிகள், "பெரிய அன்பின் வரகுண தேவர்!" எனப் புகழ்கிறார். இம்மன்னன் பல சிவத்தொண்டுகள் செய்துள்ளார்.*

*திருச்சிராப்பள்ளி இறைவனுக்கு தீபம் போட 125 கழஞ்சு பொன் வழங்கினார்.*

*அம்பாசமுத்திரம் சிவாலய வழிபாட்டிற்கு 250 பொற்காசுகள் வழங்கினார்.*

*நான்குநேரி வட்டம் இராதாபுரம் சிவன் கோயிலுக்கு நிவந்தங்கள் அளித்து வரகுணீச்சரம் என்றும் பெயரிட்டார்.*

*இவரது திருவடிகளைப் போற்றி நாமும் சிவனருளைப் பெறுவோமாக!*

*சிவசிவ! திருச்சிற்றம்பலம் சிவசிவ!*

*முற்றும்*

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- ❖ Breast Pumps
- ❖ Blood Glucose Meters
- ❖ BP Meters
- ❖ Alpha Beds
- ❖ Adult Diapers
- ❖ Under Pads
- ❖ Wheel Chairs
- ❖ Physio Products
- ❖ Home Sleep Study
- ❖ Oxygen Concentrator
- ❖ CPAP / Bi Pap
- ❖ Pulse Oxymeters
- ❖ Nebuliser
- ❖ Morning Walker
- ❖ Weighing Scale
- ❖ Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## பசு - சர்வரோக நிவாரணி

பொதுவாக தென்னகத்தின் நாட்டு மாடுகள் பெரும் அழகுடையவை. இவை எந்த இனத்தை சார்ந்து இருந்தாலும் அவற்றின் நிறங்களைக் கொண்டு பொதுப் பெயரில் அழைக்கப்படுகிறது.

வெங்காயத் தோல் வண்ணத்தில் வெளிர் சிவப்பு மாடுகளை "செவலை" என்றும் சாம்பல் வெள்ளை வண்ணத்தில் (இருக்கும் மாடுகளை "மயிலை" என்றும், கருப்பு அதிகமாக கலந்த மாடுகளை "காரி" என்றும், சிவப்பில் கருப்பு கலந்திருந்தால் "செம்பூத்காரி" என்றும், வெள்ளையில் கருப்பு மாடுகளை "காராம்பசு" (பசுக்கள்) என்றும் ஆடும் தன்மையுடன் காதுகளை ஒட்டி கீழ்நோக்கி இருக்கும் கொம்புகளுடைய மாடுகளை "மோளை மாடு" என்றும் அழைக்கப்படுகிறது.

இதில் "பத்தினி மாடு" என்பது விசேஷத் தன்மையுடையது. கன்றிலே ஸ்வாமிக்கு என பிரார்த்தனை செய்து விட்டுவிடுவார்கள். இவை "கிடாரி" என்றழைக்கப்படும் பெண் கன்று. இந்த மாடு மற்ற மாடுகளுடன் கூட்டாக மந்தையிலேயே மேய்ச்சலுக்கு செல்லும். பொதுவாக மந்தையில் செல்லும் மாடுகள் பருவநிலையை பொறுத்து கூட்டத்திலிருக்கும் பொலி காளைகள் மூலம் சினையாகி கன்றுகளை ஈன்றெடுக்கும். ஆனால், அதே கூட்டத்தில் செல்லும் இந்த வகை பசுக்களிடம் காளைகள் நெருங்குவதில்லை, எனவே, அம் மாடுகள் சினையாவதில்லை. இதனால் இவை "பத்தினி மாடு" என்றழைக்கப்படுகிறது.

இந்த இன பசுமாடுகள் 1 லிட்டரில் இருந்து அதிகபட்சம் 4 லிட்டர் வரை பால் தருபவை. குறைந்தளவே பால் கொடுத்தாலும் நோய் எதிர்ப்பு

சக்தி நிறைந்த சத்தானவையாகும்.

இன்றளவிலும் இயற்கையாக மேய்ச்சலுக்குச் செல்லும் இம்மாடுகள் தனியார் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் செயற்கை தீவனங்களை எடுத்துக் கொள்வதில்லை. இவை மந்தை மந்தையாக இருப்பதால் இவற்றிலுள்ள பொலி காளைகள் மூலமாக இயற்கையாகவே இனவிருத்தி செய்கின்றன. மேய்ச்சலின்போது தேவையானவற்றைதேடி தாமாகவே உண்பதனால் நோய் தடுப்பு ஊசிகள் இவைகளுக்கு போடுவதில்லை.

காஞ்சிபுரம் மாவட்டம் “ஏரிகளின் மாவட்டம்” என்றழைக்கப்பட்டளவில் பாசன ஏரிகள் அதிகமாக இருந்த மாவட்டமாகும். ஏரிகளின் சுற்றுப்பகுதிகளில் இருக்கும் நீர்பிடிப்பு பகுதிகள் கால் நடைகளின் மேய்ச்சலுக்கு பயன்பட்டு வந்தது. கடந்த அரை நூற்றாண்டு அரசியல் தாக்கத்தால் ஏரிகள் பெரும்பாலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு மேய்ச்சல் நிலம் சுருங்கிவிட்டதால் இன்றைக்கு இவ்வகை மாடுகள் குறைந்து வருகின்றன. மேலும், சென்னை – புதுச்சேரி கடற்கரை சாலை, மதுராந்தகம் சுற்றுவட்டாரச் சாலைகளில் மேய்கின்றன. இவற்றால் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படுவதோடு மாடுகளும் சிரமப்படுகின்றன.

வீடுகளில் வளர்ப்பதற்கு சாதுவான இந்த இனம் அரசால் அங்கீகாரப் படுத்தப் படாமல் இருப்பதனால், பல பகுதிகளில் “கறி” மாடுகள் என்றழைக்கப் படுவதோடு புரோக்கர்களால் வெட்டுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. பராமரிப்பு செலவே இல்லாத இவ்வகை மாடுகள், தொண்டை மண்டலம் எனப்படும் ஒருங்கிணைந்த பழைய காஞ்சிபுரம் மாவட்டத்தின்

சீதோஷ்ண நிலைக்கேற்ற மிகச்சிறந்த இன மாடுகளாகும்.

வேகமாக அழிந்து வரும் இந்த இனத்தை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தன்னார்வலராக நாமும் இம் மாட்டின் சிறப்புகளை வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அப்பகுதி மக்களிடம் சொல்லி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

“புலிக்குளம்” எனப்படும் “தேனி மலை மாடுகள்” – இவை தற்போதைய தேனி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் அதிகம் வளர்க்கப்படுபவை. இவற்றின் கொம்புகள் மேல்நோக்கி ஒரே சீராக அழகாக இருக்கும். திட்டமான திமில்களை உடைய இவ்வகை காளைகளில் திமில்கள் பெரியதாக இருக்கும். வருடத்தின் ஆறுமாத காலம் மலைகளிலும், ஆறுமாத காலம் சமவெளிப் பகுதிகளிலும் மேய்பவை. மலைப்பகுதி சார்ந்து பெரும்பாலும் இருப்பதால் “மலைமாடுகள்” எனப்படுகின்றன. இளஞ்சிவப்பு, வெள்ளை இவற்றுடன் கருப்பு கலந்து மற்ற இனங்கள் போலவே காணப்படும் இவை சீற்றம் மிகுந்தவை. புதியவர்களிடம் நெருங்காதவை. ஆக்ரோஷத் தன்மை கொண்ட இம்மாடுகள் மலைகளின் காட்டுப் பகுதிகளில் புலி போன்றகொடும் மிருகங்களை குத்திக் கொல்லும் திறன் கொண்டவை.

இவற்றின் நிறங்களுக்கேற்ப “கரும்போர்”, “செம்போர்”, “பால் வெள்ளை“, “மயிலை”, “செவலை” என அழைக்கப்படுகிறது. நினைவாற்றல் அதிகம் கொண்டவையாதலால் ஒருமுறை கண்டுவிட்டால் அடுத்து பல ஆண்டுகள் கழித்து சென்றாலும் அடையாளம் காண்பவை.

விவசாயப் பணியில் பாரம் சுமக்கும் வண்டிகள் இழுப்பதற்கும் உழவுக்கும் பயன்படும் இந்தவகை மாடுகள்தான் இன்றளவிலும் "ரேக்ளா" வண்டி பந்தயங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆக்ரோஷத் தன்மையும், தனித்தன்மையும் உள்ள இவைகளே "ஜல்லிக்கட்டில்" பங்குபெறுகின்றன. கடந்த கால போராட்டங்களால் ஓரளவு விழிப்புணர்வு ஏற்பட்டு தற்போது பலரால் வளர்க்கப்படுவதால் வெட்டுக்கு செல்வது தடுக்கப்பட்டு வருகிறது. என்றாலும், 1985ம் ஆண்டு வாக்கில் சுமார் 1 1/4 லட்சம் இருந்த இவ்வகை மாடுகள் தற்போது 15 ஆயிரம் என்றளவில் குறைந்துவிட்டது வருத்தம் தரும் செய்தியாகும். கடந்த சில வருடங்களாக பெருகிவரும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் இந்தவகை இனம் அழியாமல் பாதுகாக்கப்படுகிறது என்பது பெரும் நம்பிக்கையைத் தருகிறது.

- **ஆதிரையன்**

## தருமபுரி வேதபாரதி பொறுப்பாளர்கள்

1. ஸ்ரீ சந்திரமௌலி
2. ஸ்ரீ சீனிவாசன்
3. பொறியாளர் ஹரிஹரன் மற்றும் உறுப்பினர்கள்

பிரதி வருடம் கொரோனா காலம் தவிர மற்ற ஆண்டுகளில் அக்டோபர் மாதம் 2-ம் தேதி வேதபாரதியின் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்திவருகிறார்கள். வேதபாரதி செய்திகள் ஆயுள் சந்தா உறுப்பினர்கள் அதிகமாக சேர்த்து ஒத்துழைப்பு நல்கிவருகிறார்கள். மனமார்ந்த பாராட்டுக்கள்.

# வேதபாரதி - புதுச்சேரி கிளை

## 2021 ஜனவரி முதல் 2022 பிப்ரவரி வரை நடைபெற்ற நிகழ்ச்சிகள் :

**03.01.2021 ஞாயிறு :**

*காரைக்காலில் மார்கழி தனுர்மாத வீதி பஜனை திருக்கடையூர், திருநள்ளாறு, சிதம்பர க்ஷேத்ரங்கள் தரிசனம். பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டு 60ககும் மேற்பட்டோர் புதுவையிலிருந்து பயணம்.*

**15.01.2021 வெள்ளி மாட்டுப் பொங்கல் :**

*தனுர்மாத பஜனை நிகழ்ச்சியின் நிறைவு விழா உடையாளூர் கல்யாணராம பாகவதரின் நாம சங்கீர்த்தனம் ஈசிஆர் சாலையிலுள்ள ஸ்ரீ சங்கர வித்யாலயா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. 600க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நிறைவில் காஞ்சி ஆச்சார்ய ஸ்வாமிகள் படம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்பட்டது. கலந்து கொண்டோர் அனைவருக்கும் இரவு உணவு பரிமாறப்பட்டது.*

**30.05.2021 ஞாயிறு :**

*யுவ வேதபாரதியின் இளம் தலைமுறையினர்* Zoom *வாயிலாக நடத்திய "பெற்றோரைப் போற்றுவோம்" – "பெருமை சேர்ப்போம்" நிகழ்ச்சி நூற்றுக்கும் மேற்பட்ட யுவ, யுவதிகள் கலந்து கொண்டு பெற்றோர்களை போற்றிப் பேசினர்.*

**26.08.2021 வியாழன் :**

*புதுச்சேரி, மூலக்குளம், மதியொளி அரிச்சுவடி பொது நூலகத்தில் வேதபாரதியின் படைப்புகளுக்கு தனி பிரிவு "நூற்கூடம்" திறக்கப்பட்டது. வேதபாரதியின் வெளியீட்டுப் புத்தகங்கள் வைக்கப்பட்டன."*

**04.10.2021 வியாழன் முதல் 10.10.2021 புதன் வரை**

*"கந்தர் சஷ்டி" உற்சவத்தை முன்னிட்டு லோக க்ஷேமத்திற்காக பிரதி தினம் மாலை "கந்த சஷ்டி கவசம்" பாராயணம். சராசரியாக 50 பேர் கலந்து கொண்டனர்.*

**20.10.2021 புதன்**

*"அன்னாபிஷேகத்தை" முன்னிட்டு வாகனம் ஏற்பாடு செய்து ஈசனுக்கு அபிஷேக திரவியங்களோடு "திருக்காஞ்சி - ஸ்ரீ கெங்கை வராகதீஸ்வரர்" மற்றும் "திருப்புவனை – ஸ்ரீ பஞ்ச நதீஸ்வரர்" ஆகிய திருக்கோவில்கள் தரிசனம். 40 பேர் கலந்து கொண்டனர்.*

**04.11.2021 வியாழன் தீபாவளி**

*தீபாவளியை முன்னிட்டு இரண்டு நாட்கள் முன்னதாக ஒதியம்பட்டு ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் சைவ ஆகம பாடசாலை மற்றும் டாக்டர் நகர், காஞ்சி மட பாடசாலைகளில் பயிலும் சுமார் 50 மாணவர்கள் மற்றும் வாத்யார்களுக்கு வேதபாரதி சார்பாக, புத்தாடை, பட்டாசு, பலகாரங்கள் வழங்கப்பட்டது.*

**26.02.2022 சனி மற்றும் 27.02.2022 ஞாயிறு**

*மார்கழி பஜனோத்ஸவத்தின் நிறைவு விழா டாக்டர் கணேஷ் மற்றும் கடைய நல்லூர் ராஜகோபால் பாகவதர்களின் நாம சங்கீர்த்தனம் நடைபெற்றது. 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நிறைவில் இரவு உணவு இரண்டு நாட்களும் கலந்துகொண்ட அனைவருக்கும் பரிமாறப்பட்டது.*

**27.02.2022 ஞாயிறு**

*புதுவை வரலாற்றில் ஆயுஷ்யஹோமத்துடன் பதினாறு மூத்த தம்பதியர்கள் கலந்து கொண்ட "ஷோடச தம்பதியரின்" – "பார்வதி பரமேஸ்வர பூஜை" நடத்தப்பட்டது. 200 பேர் கலந்து கொண்டனர்.*

அனைவருக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டது.

**காணொளி வாயிலாக**

பிரதி பௌர்ணமியன்று மாலையில் "சக்தி வேத பாரதியின் "ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம்" நடைபெற்று வருகிறது. சராசரியாக 40க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொள்கின்றனர்.

**பிரதி ஞாயிறு**

காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை வேதபாரதி மேட்ரிமோனி - ஜாதகப் பதிவு மற்றும் பரிவர்த்தனை நடைபெற்று வருகிறது. சராசரியாக 4 ஜாதகங்கள் பதிவாகிறது.

**கடந்த 10 மாதங்களாக புதுவை வேதபாரதி சார்பில் புதுவை வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் தினமும் ஸ்ரீ ருத்ர பாராயணம் நடைபெற்று வருகிறது.**

**பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமை ஜாதகப்பரிவர்த்தனை வேதபாரதி சார்பில் நடைபெற்று வருகிறது.**

## புதுவை வேதபாரதி பொறுப்பாளர்கள்

1. பொறியாளர் ஸ்ரீ NJL ரமேஷ்
2. Advocate ஸ்ரீ பட்டாபிராமன்
3. ஸ்ரீ R. சந்திரசேகரன்
4. ஸ்ரீ நடராஜன்
5. ஸ்ரீ வேதராமன்

மற்றும் பகுதி பொறுப்பாளர்கள் சக்தி வேதபாரதி பொறுப்பாளர்கள், தொடர்ந்து சேவை செய்துவருகிறார்கள். புதுவை பொறுப்பாளர்களை மனதார பாராட்டுகிறோம்.

# ஊரப்பாக்கம் நிகழ்வுகள் 2021 - 2022

**ஏப்ரல் – 2021**

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை திங்கள் முதல் நாள் தமிழ் வருடப்பிறப்பை முன்னிட்டு "பஞ்சாங்க படணம்" எனும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. 14.04.2021 அன்று தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு மேற்படி நிகழ்ச்சியானது நமது உறுப்பினர் திரு. கிருஷ்ண சங்கர் அவர்கள் இல்லத்தில் ஊரப்பாக்கம் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கம் வாசித்து ஸ்ரீ ப்லவ வருட பலன்களை மிக தெளிவாக விளக்கினார்கள். விழாவின் இறுதியில் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

**மே 2021 – ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் ஜெயந்தி**

மே மாதம் 17-ந் தேதி ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் ஜெயந்தி விழாவினை முன்னிட்டு 5 முதல் 12 வயது உள்ள சிறார்களுக்கு ஸ்தோத்தரம் ஒப்புவிக்கும் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டு அதில் தோடகாஷ்டகம் ஸ்லோகமானது அவரவர் இல்லத்தில் இருந்தபடியே சொல்லப்பட்டு அதன் வீடியோ பதிவினை வாட்ஸ் ஆப் மூலமாக அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பலரும் கலந்து கொண்டு ஆச்சார்யாள் படத்திற்கு அருகில் அமர்ந்து கொண்டு தீபம் ஏற்றி ஸ்லோகத்தினை சொல்லி அதன் பதிவினை அனுப்பியதை பார்க்கும் பொழுது அனைவருக்கும் மிகுந்த அளவில் மகிழ்ச்சி ஏற்பட்டது. இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் வேதபாரதியின் சார்பாக ஆச்சாரியாள் படம் மற்றும் சான்றிதழ்

வழங்கப்பட்டது. இந்த ஏற்பாடானது நமது நிறுவனர் ஆடிட்டர் திரு.ராமநாதன் ஜி அவர்களின் விருப்பத்தினை நிறைவேற்றும் விதமாக நமது செயலாளர் திரு. வெங்கட்ராமன் ஜி அவர்கள் மூலமாக இந்நிகழ்ச்சியானது அனைத்து பகுதிகளிலும் மிக சிறப்பாக நடைபெற்றது. இதன் மூலம் ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாள் பற்றி குழந்தைகளும் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது.

**ஆகஸ்ட் 2021 – ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் :**

லோக க்ஷேமம் மற்றும் மக்கள் நலன் கருதியும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் வெவ்வேறு இடங்களில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் "ஸ்வாசம்" என்ற அமைப்புடன் இணைந்து நடைபெற்று வருகிறது. இதன் 300-வது வார பாராயண நிகழ்ச்சியானது கடந்த 15.08.2021 ஞாயிறு அன்று ஊரப்பாக்கம் செல்லராஜ் நகரில் அமைந்துள்ள ஸ்ரீ சாட் பிள்ளையார் கோயிலில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் நமது வேத வகுப்பில் பயின்ற வித்தியார்த்திகள் கலந்து கொண்டு ருத்ர பாராயணம் செய்து சிறப்பு அபிஷேக ஆராதனையும் நடைபெற்றது. இதில் பலரும் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

**ஆகஸ்ட் 2021 – உபா கர்மா நிகழ்ச்சி**

நமது சமூகத்தின் முக்கிய நிகழ்வான "உபா கர்மா" என்று அழைக்கப்படும் ஆவணி அவிட்டம் நிகழ்ச்சியானது ஆகஸ்ட் 21 மற்றும் 25-ந் தேதிகளில் ஊரப்பாக்கம் ப்ரியா நகரில் திரு.சுப்பிரமணிய சாஸ்திரிகள் இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்றபல்வேறு பேட்ச்களில் நடைபெற்றது. ஒவ்வொரு

*பேட்ச்சின் இறுதியிலும் திரு.இரா.நாராயண சுவாமி அவர்களும் கூடுவாஞ்சேரி திரு.அனந்த கிருஷ்ணன் அவர்களும் “காயத்திரி ஜபத்தின்” மகிமை மற்றும் அந்தணர் சமுதாயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய தர்மத்தை பற்றியும் வேதபாரதியின் செயல்பாடுகள் குறித்தும் மிகத் தெளிவாக விளக்கினார்கள். இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.*

**செப்படம்பர் 2021 (சாதுர் மாஸிய பிக்ஷா வந்தன நிகழ்ச்சி**

*காஞ்சிபுரம் அருகில் அமைந்துள்ள ஓரிக்கை மணி மண்டபத்தில் நடைபெற்றபிக்ஷா வந்தன நிகழ்ச்சியில் நம் பகுதியைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ மஹா சுவாமிகளின் அனுக்கிரக பாஷணம் பெற்று ஸ்ரீ சந்திர மௌலிஸ்வரர் பூஜையில் கலந்து கொண்டு பின்பு தேனம்பாக்கம் சென்று மஹா பெரியவா தரிசனம் பெற்று மதிய உணவு முடித்து பிரசாதமும் பெற்று வந்தது அனைவருக்கும் ஒரு எல்லையில்லா மகிழ்ச்சியை அளித்தது. இதற்கான ஏற்பாடுகளை நமது செயலாளர் திரு.வெங்கட்ராமன் ஜி அவர்களுடன் இணைந்து திரு. சந்திரசேகர் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்களும் மிக சிரத்தையாக செய்தார்கள். இறுதியில் அனைவருக்கும் சுவாமிகளின் திருக்கரங்களால் குங்கும பிரசாதம் வழங்கப்பட்டது.*

*அக்டோபர் 2021 – கலவை விஜயம்*

*02.10.2021 சனிக்கிழமை அன்று ஸ்ரீ மஹாசுவாமிகள் சிறிது காலம் தங்கியிருந்து அனைவருக்கும் அருள்பாளித்து வந்த ஆற்காடு மாவட்டத்தின் “கலவை” எனும் புண்ணிய க்ஷேத்ரத்தில் அமைந்துள்ள வேத பாட சாலை மற்றும் அதன் அருகில் அமைந்திருக்கும் வ்ருத்தாஸ்ரமத்தில்*

இருக்கும் 80க்கும் மேற்பட்டவர்களுக்கு பிடி அரிசி திட்டத்தின் மூலம் பெறப்பட்ட அரிசியும் வேதபாரதியின் ஸ்லோக வகுப்பின் மூலம் கிடைத்த சன்மானத்தில் போர்வைகள் வாங்கப்பட்டு அங்கு தங்கியுள்ள அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியானது அங்குள்ள அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இவ்வருடம் பிப்ரவரி 12 & 13 தேதிகளில் ஊரப்பாக்கம் வேதபாரதி உறுப்பினர் திருமதி. அகிலா ரமேஷ் அவர்கள் தமது குடும்பத்தாருடன் இணைந்து தங்களது இல்லத்தில் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடத்திய ருத்ர ஜபம் மற்றும் பல்வேறு ஹோமங்கள் மற்றும் க்ஷோடஷ மகாலட்சுமி பூஜையையும் மிகவும் சிறப்பாக நடத்தினார்கள். இதில் வேதபாரதி அமைப்பில் வேதம் கற்றுக்கொண்ட வித்தியார்த்திகள் கலந்து கொண்டு ருத்ரம் சமகம் மற்றும் ஸ்லோகங்கள் கூறியது அனைவருக்கும் மிகுந்த மன நிறைவை அளித்தது.

வேதபாரதியின் ஸ்லோக வகுப்பாளர் திருமதி. நீலா முரளிதரன் மாமி தாமே எழுதி பாடிய மஹா பெரியவா ஆரத்தி பாடலுடன் விழா இனிதே நிறைவுற்றது. இந்நிகழ்ச்சியானது அனைவருக்கும் ஒரு மன நிறைவை ஏற்படுத்தியது. குறிப்பாக கடந்த வருடம் 2018-ல் லலிதா மற்றும் விஷ்ணு சகஸ்ரநாமத்துடன் இதே இல்லத்தில் தான் வேதபாரதி அமைப்பின் ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதியின் அறிமுக விழா பூஜை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் வேதம் பயின்ற சிறுவன் அபிநவ் தனது அடைமொழியில் ஊரப்பாக்கம் பெயரை நிலைநிறுத்திவிட்டான். இது போன்று பலரும்

வேதம் கற்று எங்கும் வேத மந்திரங்கள் ஒலிக்க வேண்டும் என்பதே வேதபாரதியின் நோக்கம்.

**அக்டோபர் 2021 – கொலு போட்டி**

வேதபாரதியின் சார்பாக ஒவ்வொரு வருடமும் கொலு போட்டிகள் நடைபெற்று வருகிறது. அக்டோபர் 21-ல் நடைபெற்றநவராத்திரி விழாவின் “கொலு போட்டியில்” கலந்து கொண்டவர்களுக்கு முதல் இரண்டு மற்றும் ஆறுதல் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்து நமது ஆன்மீகம் கலாச்சாரம், பண்பாடு, கலைநயம் கொண்ட சிறந்த கொலு கண்காட்சிகள் வாட்ஸ் ஆப் மூலம் பெறப்பட்டு அதற்கான பரிசுகள் 30-க்கும் மேற்பட்டோர்களுக்கு வழங்கப்பட்டது.

**மார்ச் 2022 - சமஷ்டி உபநயணம்**

கடந்த 06.03.2022 ஞாயிறு அன்று ஊரப்பாக்கம் பிராமின்ஸ் அசோசியேஷன் மற்றும் வேதபாரதி அமைப்பும் இணைந்து “சமஷ்டி உபநயனம்” செங்கல்பட்டு அருகில் கோசாலையுடன் கூடிய ஸ்ரீ காமாக்ஷி வேத சிவாகம வித்யாலயத்தில் நடைபெற்றது. இதில் 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள். இதில் நான்கு வடுக்களுக்கு உபநயனம் செய்து வைக்கப்பட்டது. சங்கம் தொடங்கி இதுதான் முதல் நிகழ்ச்சியாகும். இதில் வேதபாரதி அமைப்பின் செயலாளர் திரு.வெங்கட்ராமன் ஜி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். இதில் வேதம் மற்றும் கல்வியுடன் இணைந்து படிக்க விருப்பம் உள்ளவர்களுக்கு அதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாகவும் ஆன்லைன் மூலம் வேதங்கள் கற்றுக்கொள்ளவும் ஸந்த்யா வந்தன பயிற்சி அளிக்க

உள்ளதாகவும் கூறினார்கள். மிகவும் உணர்ச்சி பூர்வமான இந்த அணுகுமுறைஅனைவருக்கும் மிகுந்த உற்சாகத்தை அளித்தது.

மேற்படி அனைத்து நிகழ்ச்சிகளையும் ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதி வேதபாரதி சார்பாக திரு.சந்திரசேகர் மற்றும் திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.அனந்த கிருஷ்ணன் அவர்கள் மற்றும் நிர்வாகிகள் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருவது மிகவும் வரவேற்கப்பட வேண்டியது.

மஹா பெரியவா அருளிய பிடி அரிசி திட்டமானது கடந்த 2018-ல் ஊரப்பாக்கம் பகுதியில் தொடங்கப்பட்டு இன்று வரை மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றுவருகிறது. இல்லங்கள் மற்றும் கோயில்களில் நடைபெறும் அன்னதானத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

**வேதபாரதி சார்பில் கோசாலைக்கு ரூ.15,000/-**
**பசுமாடு தீவனத்திற்கும், வேதபாடசாலைக்கு**
**60 போர்வைகளும் வழங்கப்பட்டது.**

ஆசிரியர்.

## திருச்சி மற்றும் கோவை வேதபாரதி பொறுப்பாளர்கள் :

வேதபாரதியின் ஆரம்பகாலம் தொட்டு தொடர்ந்து ஆதரவு நல்கி பல சிறப்பான நிகழ்ச்சிகளை செய்ய ஒத்துழைப்பு நல்கிய கோவை ஸ்ரீ M.S.விஜயன், ஸ்ரீ பசுபதி, திருச்சி J.சந்திரசேகர், ஸ்ரீ ஜம்புநாதன், ஸ்ரீ சங்கர், ஆகியோர்களை மனதார பாராட்டுகிறோம்.

## புதுச்சேரியில் "நாம சங்கீர்தனம்"

*புதுச்சேரி வேதபாரதி கிளையின் நான்காம் ஆண்டு மார்கழி பஜனோத்ஸவம் கடந்த 16.12.2021 முதல் 13.01.2022 வரை புதுவை நகரிலும், கிராமப் பகுதிகளிலும் தினமொரு பகுதியாக நடைபெற்றது. தனுர் மாத பஜனை நிறைவு விழா ஜனவரி 14, 15, 16 ஆகிய தேதிகளில் விஷேச நாமசங்கீர்த்தன நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிட்டு "கொரானா" காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது.*

*ஒத்தி வைக்கப்பட்ட நிகழ்ச்சிகள் கடந்த 26.02.2022 சனிக்கிழமை மற்றும் 27.02.2022 ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்றது.*

*26.02.2022 சனியன்று மகாராஜபுரம் சந்தானம் அவர்களின் சீடர் திரு. டாக்டர் கணேஷ் அவர்களின் திவ்ய நாம சங்கீர்த்தனம் நடைபெற்றது.*

*அடுத்த நாள் 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை காலை ஆயுஷ்ய ஹோமம், ஷோடச தம்பதிகள் கலந்து கொண்ட பார்வதி பரமேஸ்வர பூஜை, புதுச்சேரியின் பாகவதர்களும், புதுவை வேதபாரதி குடும்பத்தினர்களும் கலந்து கொண்டு நிகழ்த்திய திவ்ய நாம பஜனை என முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது.*

*தொடர்ந்து மாலை 6 மணிக்கு கடையநல்லூர் ராஜகோபால் பாகவதர் அவர்களின் நாம சங்கீர்த்தனம் நடைபெற்றது.*

*இரண்டு நாட்களும் மாலை 6 மணி முதல் இரவு 10.30 மணி வரை நிகழ்ச்சி நடைபெற்றது. ஈசிஆர் சாலையிலுள்ள ஸ்ரீ சங்கர வித்யாலயா மேல்நிலைப்*

பள்ளி வளாகத்தில் அமருவதற்கு இடமில்லாதளவில் மக்கள் வெள்ளம் நிறைந்து வழிந்தது.

நிகழ்ச்சிகளின் நிறைவில் இரவு கலந்து கொண்ட அனைவருக்கும் சுவைமிகு உணவு பரிமாறப்பட்டது. மஹாலட்சுமி கேட்ரிங் உரிமையாளர் திரு. உத்தமநாதன் வேதபாரதியின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தனது இல்ல நிகழ்ச்சியாக ஏற்று செய்வது புதுவை வேதபாரதிக்கு உறுதுணையாகும்.

வழக்கம்போல தலைவர் என்ஜேஎல் ரமேஷ், துணைத் தலைவர் அட்வகேட் பட்டாபிராமன், செயலாளர் ஆர். சந்திரசேகர் ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

ஆதிரையன்

## ஊரப்பாக்கம் / குரோம்பேட்டை வேதபாரதி பொறுப்பாளர்கள்

ஊரப்பாக்கம் :

1. ஸ்ரீ S. சந்திரசேகரன் 2. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி
3. ஸ்ரீ அனந்தகிருஷ்ணன் 4. ஸ்ரீ சங்கர நாராயணன்
5. ஸ்ரீ நாராயணசாமி 6. ஸ்ரீ சுவாமிநாதன்

குரோம்பேட்டை :

1. ஸ்ரீமதி ராஜலட்சுமி 2. ஸ்ரீமதி தனலட்சுமி
3. ஸ்ரீ நரேந்திரன் 4. ஸ்ரீ வெங்கட்ராமன்

மற்றும் பகுதி பொறுப்பாளர்கள்

தொடர்ந்து சேவை செய்துவரும் ஊரப்பாக்கம் பொறுப்பாளர்களை மனதார பாராட்டுகிறோம்.


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.
Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS
BK MATRIMONY.com
An Auspicious Beginning ...
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646;** ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# புதுவையில் "பார்வதி பரமேஸ்வர பூஜை"

வேதபாரதி புதுச்சேரி கிளையின் சார்பாக நான்காவது ஆண்டு மார்கழி பஜனோத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெற்றதன் நிறைவு விழா கடந்த 2022 பிப்ரவரி 26, 27 சனி ஞாயிறு கிழமைகளில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளின் முத்தாய்ப்பாக பதினாறு ஜேஷ்ட தம்பதிகள் கலந்து கொண்ட "ஷோடசதம்பதி பூஜை" செய்யப்பட்டது.

புதுச்சேரி, ஈசிஆர் சாலையிலுள்ள ஸ்ரீ சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில், 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை, காலை 7.05 மணிக்கு சுக்கிர பகவான் நல்லோரையில் "லோக க்ஷேமத்திற்காக" ஆயுஷ்ய ஹோமத்துடன் விழா தொடங்கியது. ஹோமம் நிறைவு பெற்றதும் தீர்த்தம் புரோக்ஷணம் செய்யப்பட்டு, ஹோம ரக்ஷை வழங்கப்பட்டதும் கனபாடிகளின் வழிகாட்டல்படி காலை 9.30 மணியளவில் பூஜை தொடங்கியது.

75 வயதிற்கு மேற்பட்ட அரை நூற்றாண்டுக்கும் மேலாக திருமண வாழ்க்கையிலுள்ள பதினாறு தம்பதிகள் தனித்தனியாக கோலமிடப்பட்ட இடத்தில் நாற்காலியில் அமர வைக்கப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஒரு பித்தளை தாம்பளத்தட்டு, ஜலத்தோடு ஒரு பித்தளை சொம்பு மற்றும் பாக்கு மட்டைத் தட்டில் தனித்தனி கிண்ணத்தில் மஞ்சள்பொடி, குங்குமம், சந்தனம், பசுநெய்-மஞ்சள் கலந்த நுனி மழுங்காத அட்சதை, நலங்கு சாந் (மஞ்சள் பொடி, சுண்ணாம்பு கலந்தது), உதிரி புஷ்பம் ஆகிய மங்கல பூஜைப் பொருட்கள் முன்கூட்டியே வைக்கப்பட்டன.

ஒவ்வொரு தம்பதிக்கும் பட்டுப்புடவை - ஜாக்கெட், பட்டு வேட்டி - அங்கவஸ்திரம், ஃபிளாஸ்க், மஞ்சள் கிழங்கு, மஞ்சள் திருமாங்கல்ய சரடு, தாழம்பூ குங்குமம், முகம் பார்க்கும் கண்ணாடி, கண்ணாடி வளையில், கண்மை டப்பா, மருதாணி மட்டைத் தேங்காயுடன் வெற்றிலைப் பாக்கு, வாழைப்பழம் ஆகிய திவ்ய மங்கல தாம்பூல பொருட்கள் வேதபாரதி பெயரிட்ட பெரிய பையுடன் (Travel Bag) கொடுக்கப்பட்டது.

தம்பதிகளுக்கு அவரவர்களின் மகன் – மருமகள் ஜோடியும், சந்ததி இல்லாத தம்பதிகளுக்கும், வாரிசுகள் வரமுடியாத சூழலில் இருந்த தம்பதிகளுக்கும் வேதபாரதியின் தன்னார்வலர்கள் சந்ததியாக இருந்தனர். இவர்கள் ஒவ்வொரு ஜோடியும், தம்பதிகளின் திருப்பாதங்கள் அலம்பி, சக்தி சொரூபியான மாமிகளுக்கு பாதங்களில் மஞ்சள் பூசி, நலங்கிட்டு, இருவரது பாதங்களுக்கு சந்தனம், குங்குமம் திலகமிட்டு புஷ்ப மாலை சாற்றி கனபாடிகளின் வேதங்களால் “உமா மஹேஸ்வரர்” ஆவாஹனம் செய்யப்பட்டனர்.

பிறகு ஷோடச உபசாரங்களோடு “த்ரிசதி” அர்ச்சனை செய்து தூப, தீப, நைவேத்ய ஆரத்தி செய்து விழா நடைபெற்றபள்ளி வளாகத்தில் குழுமிருந்த நூற்றுக்கணக்கான வேதபாரதி சொந்தங்கள் ஷோடச தம்பதிகளை பிரதட்சணம் செய்து ஆசீர்வாதங்கள் கிடைக்கப் பெற்றனர்.

நிறைவாக, ஷோடச தம்பதிகளுக்காக கல்யாண சமையல் வகைகள், கோலமிட்டு தலைவாழை இலை போட்டு ஒவ்வொரு தம்பதிகளையும் தனித்தனியாக அமரவைத்து பரிமாறப்பட்டது.

புதுச்சேரி வரலாற்றில் முதன் முறையாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சி புதுவை பிராமண சமுதாய மக்களுக்கு ஒரு வரப்ரசாதமாக அமைந்தது மட்டுமின்றி கலந்துகொண்டோரின் எண்ணிக்கையும் அவர்களது ஒத்துழைப்பும் “வேதபாரதியின்” சமூகப் பணிக்கு கிடைத்த பெரும் அங்கீகாரமாகும். வேதபாரதியின் செயலாளர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க புதுச்சேரி நிர்வாகிகள் விழாவிற்கு விரிவான எற்பாடுகள் சிறப்பாக செய்திருந்தனர்.

**ஆதிரையன்**

## வாசகர் கடிதம்

1. மார்ச் மாத புத்தகத்தில் உள்ள அனைத்து விவரங்களும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. காரடையான் நோன்பு விளக்கம், பகவத்கீதை கட்டுரை - ஸ்ரீ சூர்யநாராயணன் மாமா எழுத்து அற்புதம். வேதபாரதி தாத்தா குழந்தைகளுக்கான பகுதி, சாதனைப்பறவைகள் - டாக்டர்.ஷ்யாமா, காந்தலட்சுமி சந்திரமௌலி கட்டுரை, உறவுகள் தொடர்கதை கட்டுரை, பசுவைப்பற்றிய ஆதிரையன் கட்டுரை, மணியன் புத்தக விமர்சனம் படிக்க படிக்க அமுதமாக இருந்தது. புத்தக குழுவிற்கு பாராட்டுக்கள்.

**ஸ்ரீ நாகராஜன் & சீதா நாகராஜன், வேளச்சேரி**

2. மார்ச் மாத அனைத்து கட்டுரைகளும் அற்புதமாக மெறுகேரி உள்ளது. புதிய ஆண்டுக்கான பஞ்சாங்கம் போடமுடியுமா.

**ஸ்ரீ ராமகிருஷ்ணன், திருச்சி.**

## சென்னை வேதபாரதியின் நிகழ்வுகள்

**ஜனவரி - ஏப்ரல் 2021**

1. ஸ்ரீ சங்கர ஜெயந்தியை முன்னிட்டு இந்த ஆண்டு குழந்தைகளுக்கு ஸ்ரீ கணேஸ பஞ்சரத்னம், ஸ்ரீ தோடகாஷ்டகம் சொல்லி கொடுத்து, போட்டிகள் நடத்தி பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டது.
2. மதுரை ஸ்ரீ முரளிதரன் வாயிலாக ஆன்லைன் மூலம் ஸம்ஸ்கிருத வகுப்புகள் நடந்து வருகிறது.
3. வேதபாரதி செய்திகள் ஆயுள் சந்தா செலுத்தி உள்ள 60 சந்தாதாரர்கள் தொகை ரூ.90000/- தனியாக வைப்புத் தொகையாக வைக்கப்பட்டது.
4. 16.02.2021 அன்று சென்னை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் வேதபாரதி ஔவையார் அறநெறி கல்வி அறக்கட்டளை வாயிலாக பாவை விழா நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.
5. ஆன்லைன் வழியாக 360 குழந்தைகளுக்கு திருப்பாவை - திருவெம்பாவை போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது.
6. ஸந்த்யா வந்தன போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.
8. 17.02.2021, 26.02.2021 அன்று ஆன்லைன் வழியாக வேதபாராயணம் நடைபெற்றது.

**மே - ஜுன் 2021**

1. மே மாதத்தில் ஆன்லைன் வழியாக ஸந்த்யா வந்தன பயிற்சி நடத்தப்பட்டது.
2. தொடர் வகுப்புகள் ஆன்லைன் வழியாக நடத்த தேவையான உபகரணங்கள் (Laptop) வாங்கப்பட்டது.
3. சுதந்திர பாரதத்தின் 75-ம் ஆண்டு வருவதை முன்னிட்டு ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி மூலமாக சுதந்திர போராட்ட வீரர்கள் பற்றிய தொடர்

சொற்பொழிவு தொடர்ந்து 21 வாரங்கள் நடத்தப்பட்டது.

4. 01.05.2021, 02.05.2021 ஸந்த்யா வந்தன ரிக் வேத வகுப்புகள் நடத்தப்பட்டது.
5. 09.05.2021 வேதபாரதி உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.
6. 13.05.2021 பூஜ்ய ஸ்ரீ தேனி வேதபுரி ஸ்ரீ ஓம்காராநந்த ஸ்வாமிகளுக்கு ஸ்ரத்தாஞ்சலி நடத்தப்பட்டது.

**ஜுலை - ஆகஸ்ட் 2021**

1. புதுச்சேரி நந்தலாலா வாசகசாலையில் வேதபாரதி புத்தகங்கள், வெளியீடுகள் வைத்து, பொது மக்கள் படித்து பயன் பெறும் வகையில் தனியாக ஓர் ரேக் பெற்று, வேதபாரதி புத்தகங்கள் மாதப் பத்திரிகை வழங்கப்பட்டது.
2. வேதபாரதி ஆன்லைன் ஸ்லோக வகுப்புகளில் பயிலும் வித்யார்த்திகள் துணையுடன், மதுரை ஸ்ரீமதி நீலா மாமி, ஸ்ரீ முரளிதரன் ஆதரவுடன் முதியோர் இல்லங்களில் உள்ள வசதியில்லாத முதியோர்களுக்கு 400 போர்வைகள் வழங்கப்பட்டது.
3. முசிறி ஸ்ரீ தீட்சதர் கோசாலைக்கு வைக்கோல் ஸ்ரீ சூரியநாராயண மாமா ஆதரவுடன் வழங்கப்பட்டது.
4. ஸ்ரீமதி காந்தலட்சுமி சந்த்ரமௌலி அவர்கள் எழுதிய பெற்றோர்களே கவனியுங்கள் ஆங்கிலத்தில் Parent's Ponder என்றநூலை வேதபாரதி ஆன்லைன் வழியாக வெளியிடப்பட்டது.
5. வேதபாரதி ஔவை விழா 2021 – 3ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை 300 குழந்தைகளுக்கு ஔவை விழா நடத்தப்பட்டது.

**செப்டம்பர் - அக்டோபர் 2021**

1. 19.07.2021 அன்று காஞ்சி ஆச்சார்யார் முன்பு வேதபாரதி குழந்தைகள் வேதங்கள், ஸ்லோகங்கள் கற்றுக் கொண்டதை சொல்லிக் காண்பித்து ஆசி பெற்றார்கள். இந்நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.
2. பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் ஆராதனை விழா ஜுலை மாதம் மந்தைவெளி ஸ்ரீ சங்கர குருகுலத்தில் வேதோக்த்தமாக நடைபெற்றது.
3. 03.08.2021 வேதபாரதி சார்பில் ஸ்ரீக்ருஷ்ண ஜெயந்தி விழா ஆன்லைன் வழியாக சிறப்பாக நடைபெற்றது. பங்கு பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.
4. ஊரப்பாக்கம் பகுதியில் 21.08.2021 அன்றும் 22.08.2021 அன்றும் ருக், யஜூர் வேத உபகர்மா சிறப்பாக நடந்தது.
5. தென்காசி மாவட்டம் ஸ்ரீ ப்ரனவ ஆசிரமம் 60 போர்வைகள் திருப்போரூர் முதியோர் இல்லம் 40 போர்வைகள் வழங்கப்பட்டது.

**நவம்பர் - டிசம்பர் 2021**

1. டிசம்பர் மாதத்தில் 24,25 தேதிகளில் வேதா கேம்ப் சென்னை, ஏ.பி.எல். குளோபல் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக மஹா மஹோபாத்யாய க்ருஷ்ணமூர்ததி ஸாஸ்திரிகள், மஹா மஹோபாத்யாய மணி ட்ரவிட் ஸாஸ்திரிகள், பாரத பண்பாட்டு காவலர் ஆர்.வி.பி.எஸ். மணியன் ஜி, வேதபாரதியின் ஆலோசகர் ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி, யோகாச்சாரியார் சந்திரசேகர் ஜி கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ப்ரம்மஸ்ரீ கும்பகோணம் வேதசிரோன்மணி கைலாசநாத

கனபாடிகள் தலைமையில் குழந்தைகளுக்கு வேதபாடங்கள் சிறப்பாக நடைபெற்றது.

3. வேதபாரதியின் மூத்த நிர்வாகி ஸ்ரீ சூர்யநாராயண மாமா அவர்கள் சதாபிஷேக நினைவாக மாமாவால் எழுதப்பட்டு வரும் ஒரு நிமிடம் உங்களோடு என்ற தொடரை புத்தகமாக இனியவை நாற்பது என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

5. பெண்மையைப் போற்றுவோம் நிகழ்ச்சியில் சென்னை சைபர் க்ரைம் அதிகாரிகள் துணைகொண்டு மாணவிகளுக்கு விழிப்புணர்வு வகுப்பு சிறப்பாக நடத்தப்பட்டது.

6. 2021-ம் ஆண்டுக்கான கொலுப்போட்டி புதுவை, ஊரப்பாக்கம், நங்கநல்லூரில் சிறப்பாக நடத்தப்பட்டது.

**ஜனவரி - பிப்ரவரி 2022**

1. மார்கழி மாதத்தில் குழந்தைகளுக்கு திருப்பாவை திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டி நடத்தப்பட்டது.

2. கடந்த 1 1/2 வருடமாக ஸ்லோக வகுப்புகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளுக்கு போட்டிகள் நடத்தி நன்றாக சொல்லும் குழந்தைகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.

3. வேதபாரதிக்கு உடல் உழைப்பு நல்கும் தொண்டர்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க கல்வித்தொகை வழங்கப்பட்டது.

4. வேதபாரதியில் உடன் பணியாற்றும் குடும்பங்களில் உள்ளவர்கள் சிலருக்கு மருத்துவச்செலவுகளுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

5. ஸ்லோக வகுப்புகள் மூலம் ஸ்ரீமதி நீலா முரளி மற்றும் முரளி தம்பதியினருக்கு சம்பாவனையாக

கிடைக்கும் தொகையினை அவர்கள் விருப்பத்துடன் கோஸாலைகளுக்கு வைக்கோல் தீவனங்கள் வாங்க வழங்கப்பட்டது.

6. வேதபாரதி சார்பில் மதுராந்தகம் கோசாலை, ஸ்ரீ விஷ்ணுபுரம் கோசாலை, கருவளர்ச்சேரி கோசாலைகளுக்கு பசுமாடுகளுக்கு தீவனத்திற்கு பணம் அனுப்பப்பட்டது.

## வேதபாரதியின் இலக்கு

- பெண்குழந்தைகளுக்கு வாழ்வியல் பயிலரங்கம் நடத்துதல்.
- 5000 பெண்குழந்தைகள் தங்கள் சமூக குடும்பங்களிலேயே திருமணம் செய்து கொள்ள வைத்தல்.
- 5000 அந்தண சிறுவர்களுக்கு வேத வகுப்புகள் ஸந்த்யா வந்தன வகுப்புகள் நடத்துதல்.
- 50000 குழந்தைகளுக்கு திருப்பாவை, திருவெம்பாவை, ஆத்திச்சூடி கொன்றைவேந்தன் பயிற்றுவித்தல்.
- 50 கோயில்களின் பதிகங்களை அந்த ஊர்களிலுள்ள குழந்தைகளுக்கு மனனம் செய்து வைத்தல்.
- 50 கோசாலைகளுக்கு பொருளாதார உதவி செய்தல்.
- 50 வேத பாடசாலைகளுக்கு பொருளாதார உதவி செய்தல்.

என்றும் பாரதப் பண்பாட்டு சேவையில்

T. R. ராமநாதன், நிறுவனர் வேதபாரதி

ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி

ஸ்ரீ R. வெங்கட்ராமன், ஸ்ரீ K. ராமகிருஷ்ணன்

ஸ்ரீ D. ராமன், ஸ்ரீ S. சங்கர், ஸ்ரீ S. முரளிதரன்

# பெண்மையைப் போற்றுவோம்

1. வேதபாரதி வழங்கும் பெண்மையை போற்றுவோம் ஓர் பார்வை, பெண்களால், பெண்களுக்காக நடத்தப்படும் வாழ்வியல் வகுப்புகள் பிரதி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு 2009-ம் ஆண்டு முதல் பல ஊர்களில் நடந்து வருகிறது. தற்போது Zoom வழியாக 24.05.2020 முதல் நடந்து வருகிறது.

24.05.2020, 28.06.2020, 25.07.2020 ஆகிய தேதிகளில் இசையோடு இணைவோம் நிகழ்ச்சி நடைபெற்றது.

22.08.2020 பெற்றோர் மேன்மை - Software use - By R. Natarajan, IPS அவர்களால் நடத்தப்பட்டது.

20.09.2020 Group Discussion Indian Tradition

18.10.2020 - பெண்களின் முன்னேற்றம் டாக்டர். ஷ்யாமா அவர்களால் நடத்தப்பட்டது.

22.11.2020 பிரச்சனைகளை எதிர்கொள்ளல் - ஸ்ரீமதி பூர்ணிமா, மனநல ஆலோசகர் அவர்களால் நடத்தப்பட்டது.

27.12.2020 - இந்திய பெண்களின் கோல்டன் டேஸ், வேதபாரதி குழந்தைகளால் நடத்தப்பட்டது.

24.01.2021 - முதியோர் இல்லங்கள் ஓர் பார்வை, வேதபாரதி குழந்தைகளால் நடத்தப்பட்டது.

28.02.2021 - Menstruation Science behind - practices வேதபாரதி குழந்தைகளால் நடத்தப்பட்டது.

28.03.2021 - பெண்களின் முன்னேற்றம் வேதபாரதி குழந்தைகளால் நடத்தப்பட்டது.

25.04.2021 - எதிர்கால இந்தியா வேதபாரதி குழந்தைகளால் நடத்தப்பட்டது.

23.05.2021 - சமூக வலைதளங்களை எப்படி உபயோகிப்பது, வேதபாரதி குழந்தைகளால்

நடத்தப்பட்டது.

27.06.2021 - பெண் குழந்தைகளின் தனித்திறமை

25.07.2021 - பெண்களின் தனித்திறமை

29.08.2021 - வெற்றிப்பாதை டாக்டர்.ஷ்யாமா அவர்களால் நடத்தப்பட்டது.

29.09.2021 - பாரம்பர்ய பெருமைமிகு பாரதம், வேதபாரதி குழந்தைகளால் நடத்தப்பட்டது.

03.10.2021 - Dr.ஸ்ரீமதி ஜெயலட்சுமி அவர்கள் உடல் நலம் குறித்து வகுப்புகள் நடத்தப்பட்டது.

28.11.2021 - Social Media - Srimathi Anusha. Cyber Crime, Inspector of Police Chennai, பாதுகாப்பு வகுப்பு நடத்தப்பட்டது

26.01.2022 - சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள், வேதபாரதி குழந்தைகளால் நடத்தப்பட்டது.

27.02.2022 - ஸ்ரீமதி பூர்ணிமா அவர்களால் பெண்களின் மேம்பாடு வகுப்பு நடத்தப்பட்டது.

27.03.2022- ஸ்ரீமதி அனுசா அவர்களால் பெண்கள் பாதுகாப்பு குறித்து வகுப்புகள் நடத்தப்பட்டது.

## திருப்பூர் வேதபாரதி பொறுப்பாளர்கள்

Dr. K. நடராஜன் அவர்களின் வழிகாட்டுதலில்

1. ஸ்ரீ S. வேணுகோபாலன், 2. ஸ்ரீ R. சந்திரசேகரன்
3. ஸ்ரீ P.A. சுப்ரமணியம், 4. ஸ்ரீ S. கணேசன் குழுவினர் பிரதிவாரம் ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம பாராயணம், திருமுருகன் பூண்டியில் நெய்தீப திருப்பணி, குழந்தைகளுக்கு சங்கர ஜயந்தி பாடல் ஒப்புவித்தல், சுந்தரர் தேவாரம் பாடல்கள் ஒப்புவித்தல் செயல்கள் நடைபெற்று வருகிறது. புத்தகத்திற்கு தொடர்ந்து நல்லாதரவு கொடுத்துவருகிறார்கள். மனமார்ந்த பாராட்டுக்கள்.

# வேதபாரதியின் ஸ்லோக வகுப்புகள்

**மதுரை ஸ்ரீமதி நீலா முரளிதரன், ஸ்ரீ முரளிதரன்** அவர்களின் பெரும் முயற்சியால் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் வேதபாரதியின் சார்பில் கீழ்கண்ட ஸ்லாகங்கள் நடத்தப்பட்டு 500 க்கும் மேற்பட்ட சிறியவர்களும் பெரியவர்களும் பயின்று வருகிறார்கள்.

**குழந்தைகளுக்காக**

1. கணேச பஞ்சரத்னம்
2. மார்கபந்து ஸ்தோத்ரம்
3. ஹனுமன் சாலீசா
4. வைத்தியநாத அஷ்டகம்
5. குரு பாதுகா ஸ்தோத்ரம்
6. குரு அஷ்டகம்
7. பாண்டுரங்காஷ்டகம்
8. தோடகாஷ்டகம்
9. ப்ரக்ஞா விவர்தன கார்த்திகேய ஸ்தோத்ரம்
10. ஸ்ரீ சிவ பஞ்சாட்க்ஷர ஸ்தோத்ரம்
11. ஸ்ரீ சங்கராச்சார்ய வர்யம்
12. துளசி ஸ்தோத்ரம்

**பெரியவர்களுக்கு**

1. கனகதாரா ஸ்தோத்ரம்
2. சுப்ரமண்ய புஜங்கம்
3. ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்தோத்ரம்
4. ஸ்ரீ யோக மீனாக்ஷி ஸ்தோத்ரம்
5. பஜகோவிந்தம்
6. மாத்ருகா பஞ்சகம்
7. சந்திரசேகராஷ்டகம்
8. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அஷ்டகம்
9. ஸ்ரீ மூகாம்பிகா அஷ்டகம்
10. மாத்ருஷோடஷி
11. ஸ்ரீ மீனாக்ஷீ பஞ்சரத்னம்
12. மந்த்ர மாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம்

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org

## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th April 2022




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.